# இஸ்லாத்தில் அமைதி எனும் பண்பாடு

அமைதி மட்டுமே மனிதர்களுக்கும்
பிரபஞ்சத்திற்குமான ஒரே பண்பாடாகும்.



மவ்லானா வஹீதுத்தீன் கான்

# இஸ்லாத்தில் அமைதி எனும் பண்பாடு

அமைதி மட்டுமே மனிதர்களுக்கும்
பிரபஞ்சத்திற்குமான ஒரே பண்பாடாகும்.

மவ்லானா வஹீதுத்தீன் கான்

*தமிழில்*

யூசுப் ராஜா

குட்வோர்ட் புக்ஸ்

இஸ்லாத்தில் அமைதி எனும் பண்பாடு

ஆசிரியர் : மவ்லானா வஹீதுத்தீன் கான்

தமிழில் : யூசுப் ராஜா

மீளாய்வு : பைஸ் காதிரி

முதற்பதிப்பு : அக்டோபர் 2023

English Version : Culture of Peace

This book is copyright free.

CPS International
Centre for Peace and Spirituality International
1, Nizamuddin West Market, New Delhi – 110013, India.
e-mail: info@cpsglobal.org
www.cpsglobal.org

Goodword Books
A-21, Sector 4, Noida – 201301, Delhi NCR, India.
e-mail: info@goodwordbooks.com
www. Goodwordbooks.com

Center for Peace and Spirituality USA
2665, Byberry Road, Bensalem, PA 19020, USA.
e-mail: kkaleemuddin@gmail.com

Goodword Books – Chennai
324, Triplicane High Road, Chennai-600005, India.
e-mail: chennaigoodword@gmail.com
Mob: +91 97908 53944 / +91 96001 05558

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 5 |
| 1 | அமைதியே பிரபஞ்சத்தின் மதம் | 7 |
| 2 | குர்ஆன் அமைதியின் நூல் | 8 |
| 3 | வன்முறையும் அமைதியும் | 9 |
| 4 | சமாதானமே சிறந்தது | 10 |
| 5 | பூமியில் குழப்பம் உண்டாக்காதிருத்தல் | 12 |
| 6 | சதிச் செயல்களுக்கு முடிவு கட்டுதல் | 13 |
| 7 | தீவிரவாதத்திற்கு மறுப்பு | 14 |
| 8 | வன்முறைத் தீயை அணைப்பது | 17 |
| 9 | சீர்திருத்தத்திற்குப் பின் போட்டி | 18 |
| 10 | மோதலைத் தவிர்த்தல் | 19 |
| 11 | வெற்றியின் ரகசியம் பொறுமை | 20 |
| 12 | சச்சரவிடாதிருத்தல் | 21 |
| 13 | போர் என்பது தற்காப்புக்காக | 22 |
| 14 | அமைதி வழியில் கொள்கையைப் பரப்புதல் | 24 |
| 15 | உங்கள் எதிரியை நண்பராக்குவது | 25 |
| 16 | நமது செயல்களின் விளைவு | 26 |
| 17 | கோபம் என்பது பலவீனமே | 28 |
| 18 | பொறுமையாக இருந்து உண்மையை நோக்கிச் செல்லுதல் | 29 |

19 அமைதியின் விலை 30
20 அமைதிக்கான அழைப்பை ஏற்றுக் கொள்ளல் 33
21 மாபெரும் கொடை 34
22 அமைதி பாதுகாப்பிற்கான வழி 35
23 மனிதத்துவத்திற்கான கருணை 37
24 ஜிஹாத் ஓர் அமைதி வழிச் செயல்பாடு 39
25 மௌனத்தில் ஈடேற்றம் 41
26 எந்த விலை கொடுத்தேனும் அமைதியை அடைவது? 43
27 இறைவனின் பெயரே அமைதி என்பதாகும் 44
28 யார் பலசாலி? 45
29 சமூக அமைதிக்கான சூத்திரம் 46
30 எதிரியுடன் மோத வேண்டாம் 47
31 சாத்வீக முறை 48
32 வேறுபாடு கொள்வதன் எல்லைகள் 49
33 அமைதி வழிமுறையே சிறந்தது 50
34 கடினமல்ல, இணங்கிப் போதல் 51
35 அமைதிக்கான குடிமக்கள் 52
36 வன்முறை ஏமாற்றத்தின் விளைவு 52
37 காத்திருப்பதும் கூட ஒரு தீர்வே 53
38 அடக்குமுறை : இறைவனின் எச்சரிக்கை 54
39 மௌனத்தின் ஆற்றல் 56
40 இருக்கும் நிலையிலேயே நேர்மறைச் செயல்பாடு 57
41 வன்முறை நியாயமற்றது 58
42 பகைமைக்குத் தீர்வு 59
43 ஆயுத சேமிப்பால் பயனில்லை 60
44 மனசாட்சியே சிறந்த நீதிபதி 61
45 வெற்றி என்பது தோல்வியாகவும் இருக்கக் கூடும் 63
46 குறை கூறுவதை உடனே நிறுத்துங்கள் 64
47 எதிரிகளை நேசியுங்கள் 65
48 அமைதியின் ஆற்றல் 66
49 அமைதியின் மூலத்தோற்றம் 67

# முன்னுரை

அமைதி என்றால் என்ன? போரில்லாத சூழ்நிலையே அமைதி என்று சில அறிஞர்கள் வரையறுக்கிறார்கள். இந்த வரையறை சொல்லகராதிப்படியோ எழுத்துப் பூர்வமாகச் சொல்லப்படும் போதோ சரியே. ஒரு சமூகம் வன்முறை அல்லது போர்ச் சூழல் இல்லாத நிலையில் இருந்தால் அதனை 'அமைதி' என்று கூறலாம். தனி நபர்களுக்கிடையிலோ குழுக்களுக்கிடையிலோ வன்முறை அல்லது போர் இல்லாத நிலையில் தானாகவே அமைதி மலரத் தொடங்குகிறது.

இருந்தபோதும், ஒரு சமூகத்தில் அமைதியான நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றால், அச்சமூகம் வன்முறை அல்லது போர் இல்லாத நிலையை அடைவதில் வெற்றி காண்பது மட்டும் போதுமானதல்ல. வன்முறை அல்லது போர் இல்லாத நிலையே அமைதி என்று வரையறுக்கப்படுவது ஓர் எல்லை வரையிலானது. அமைதி என்பதைச் சிறந்த முறையில் வரையறுப்பது என்பது அமைதியின் தன்மையை, குணங்களை அளிக்கும் உடன்பாடான இயல்புகளின் அடிப்படையில் வரையறுப்பதாகும். இதன்படி ஒரு சமூகத்தில் உடன்பாடான – ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் நிலவி அதன் அடிப்படையில் செயல்பாடுகள் அமையுமேயானால் அச்சமூகம் அமைதியாகத் திகழ்கிறது என்று சொல்ல முடியும்.

ஒரு சமூகத்தில் அமைதி உருவாக்கப்படுவது என்பது நீர் நிரம்பிய அணையின் மதகுகள் திறக்கப்பட்டு அதன் வழி நீரால் ஆறுகள் நிரம்புவது போலாகும். வாழ்க்கை என்பது முன்னேறிச் செல்லும் ஆற்று வெள்ளம் போலத் தனது உள்ளுணர்வு சக்தியால் செலுத்தப்படுவதாகும். அதன் வழியில் செயற்கையான தடை ஏற்படுத்தப்படும் போதுதான் அதன் பயணம் நிற்கிறது. அத்தகைய

தடையேதும் இல்லாத நிலையில் இயற்கையின் உந்துதலால் வாழ்க்கை அனைத்து பரிமாணங்களிலும் மலர்ந்து மிளிர்கிறது.

வன்முறையும் போரும் வாழ்க்கையின் இயல்பான ஓட்டத்தைச் சீர்குலைக்கும் தடைகளாகும். மாறாக அமைதி என்பது அனைத்துத் தடைகளையும் மீறி வாழ்க்கையில் முன்னேறிச் செல்லும் பயணத்திற்கான வழியைத் தேடுவதாகும்.

போர் என்பதன் அடிப்படையிலேயே நாம் அமைதி என்பதைப் பற்றி எப்போதும் பேசி வருகிறோம். மனித வாழ்வின் மொத்தத்திலும் அமைதி என்பதே ஆழமாகத் தொடர்பு கொண்டது என்பது உண்மையாகும். அமைதி என்பது முழுமையான கொள்கையை, கருத்தைத் தன்னகத்தே கொண்டதாகும். அது வெற்றிகளின் கதவுகளைத் திறக்கும் பெருஞ்சாவியாகும். எல்லா வகையான முயற்சிகளும் வெற்றி பெறும்படியான, சாதகமான சூழ்நிலையை அமைதி உருவாக்குகிறது. அமைதி இல்லாமல், சிறியதோ பெரியதோ எந்தவொரு உடன்பாடான செயல்பாடும் சாத்தியப்படுவதில்லை.

# அமைதியே பிரபஞ்சத்தின் நெறி

*திருக்குர்ஆன் கூறுகிறது:*

*“சூரியன் சந்திரனை அடைய முடியாது. இரவு பகலை முந்த முடியாது. ஒவ்வொன்றும் அதனதன் வட்டப்பாதையில் நீந்திக்கொண்டிருக்கின்றன”. (36:40)*

ஒரு வானவியல் தத்துவத்தைக் கூறி முழு பிரபஞ்சமும் அமைந்துள்ள தத்துவ முறையைக் குர்ஆன் கூறுகிறது. மேலும் இதுவே அமைதியின் கருத்தாகும். பிரபஞ்சத்தில் எண்ணற்றவை நிலையான இயக்கத்தில் உள்ளன. இருந்தும் அவை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதேயில்லை. பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றும் தனது வரையறைக்குள் சஞ்சரித்துக் கொண்டு தத்தமது செயல்பாட்டைச் செய்கின்றன. எவற்றின் எல்லையிலும் எவையும் தலையிடுவதில்லை. இதன் காரணமாகத்தான் அவை ஒரு போதும் மோதிக்கொள்வதே இல்லை.

இந்த அமைதிக் கலாச்சாரத்தைத்தான் மனித இனம் கைக்கொள்ள வேண்டும். பிரபஞ்சத்தின் ஏனையவை செயல்படுவதைப்போலவே பிரபஞ்சக்கொள்கையின் அடிப்படையில் மனித இனமும் தனது வாழ்வை மிகச் சரியாக அமைத்துக் கொள்ள வேண்டும். இதன் பொருள் – மனிதர்கள் வன்முறைப் பாதையையும் மோதல் போக்கையும் கைவிட்டு அமைதி வழியில் வாழ வேண்டும் என்பதாகும்.

பிரபஞ்சத்தின் கலாச்சாரம் என்பது அமைதிக் கலாச்சாரமாகும். இந்த அமைதியால்தான் பிரபஞ்சமானது பல்லாயிரம் ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. அவற்றின் செயல்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் எந்த மோதலையும் அவற்றுக்குள் காண முடியவில்லை. வன்முறைக் கலாச்சாரம் பிரபஞ்சத்தில் நிலவுமேயானால் பிரபஞ்சம் நாசமாகிப் போய் மனிதர்கள் வாழும் சாத்தியமே இல்லாமல் போயிருக்கும்.

பிரபஞ்சத்தைப் படைத்தவனே நம்மையும் படைத்துள்ளான். பிரபஞ்சத்தில் அமைந்துள்ள அமைதிக் கலாச்சாரத்தையே மனிதர்களும் கைக்கொள்ள வேண்டும் என்று படைத்தவன் விரும்புகிறான். மனிதர்கள் அல்லாத பிரபஞ்சத்தின் ஏனைய அனைத்தும் இயல்பாகவே அமைதிக் கலாச்சாரத்தைக் கொண்டுள்ளபோது, மனிதர்கள் தங்கள் சுய விருப்பத்தின்படி வாழும் சுதந்திரமான படைப்பினமாக உள்ளனர் என்பதே ஒற்றை வேறுபாடாகும். எனவே, மனிதர்கள் அமைதிக் கலாச்சாரத்தைத்

தங்கள் விருப்பப்படி முடிவு செய்துகொள்ள இறைவன் விரும்புகிறான்.

> *ஒரு சமூகத்தின் உறுப்பினர்களிடையே உடன்பாடான மற்றும் ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் நிலவி அதன் அடிப்படையில் அவர்களின் செயல்பாடுகள் அமையுமேயானால் அச்சமூகம் அமைதியாகத் திகழ்கிறது என்று சொல்ல முடியும்.*

## குர்ஆன் அமைதியின் நூல்

குர்ஆன் என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் அமைதிக்கான நூலாகும். அது வன்முறைக்கான நூலல்ல. குர்ஆனின் அனைத்து மொழிபெயர்ப்புகளும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ அமைதியுடன் தொடர்புடையவை ஆகும். குர்ஆனின் முதல் வாக்கியமே, 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்' என்று அமைந்துள்ளது. இதன் பொருள், "அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் பெயரால்" என்பதாகும். இதனை வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இந்த நூலை அளித்த இறைவனின் உயரிய அடைமொழி கருணை என்பதாகும். மேலும் இந்த நூல் அவன் அருளும் கருணையின் வெளிப்பாடாக இருக்கிறது என்பதுமாகும்.

குர்ஆனின் அனைத்து வசனங்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அமைதியுடன் தொடர்புடையவையாகும். குர்ஆனில் 6666 வசனங்கள் உள்ளன. அவற்றுள் வெறும் 40 வசனங்களே போர் பற்றிய கட்டளைகளாக உள்ளன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் குர்ஆனின் வசனங்களில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே போர் பற்றிய வசனங்கள் உள்ளன. இன்னும் சொல்லப்போனால் மொத்த குர்ஆன் வசனங்களில் அத்தகைய வசனங்களின் சதவீதம் வெறும் 0.6 மட்டுமே.

> *குர்ஆனை இறைவேதம் எனக் கொள்பவர்கள் குர்ஆனின் போதனைகளைப் பின்பற்றி முழுமையாக அமைதியை நேசிப்பவர்களாக ஆனால் மட்டுமே மூஃமின்கள் அல்லது உண்மையான இறை நம்பிக்கையாளர்கள் என அவர்களைக் கருத முடியும். எந்த நிலையிலும் அவர்கள் வன்முறைப் பாதையை மேற்கொள்ளக் கூடாது.*

இதனடிப்படையில் இஸ்லாம் – முஸ்லிம்கள் என்ற இரண்டையும் சரியாக மக்கள் புரிந்துகொள்ள வேண்டியதன்

தேவையை ஒருவர் அழுத்தமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. பொதுவாக முஸ்லிம்களின் அனைத்துச் செயல்களையும் குணங்களையும் 'இஸ்லாம்' என்று அவர்கள் முத்திரை குத்தவே கூடாது. இஸ்லாம் என்பது ஒரு கொள்கையாகும். இஸ்லாமிய போதனைகளை முழுமையாகப் பின்பற்றும் போது மட்டுமே ஒருவரை முஸ்லிம் எனக் கருத முடியும். இஸ்லாமிய போதனைகளைப் பின்பற்றாமல் தங்களை இஸ்லாத்திற்கான செயல்வீரர்கள் என்று கூறிக் கொண்டாலும் கூட அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த விதச் சம்பந்தமுமில்லை.

## வன்முறையும் அமைதியும்

அமைதி என்பது நன்கு திட்டமிடப்பட்ட முயற்சி அல்லது செயலாகும். அதே வேளையில் வன்முறை என்பது உணர்ச்சி வசத்தால் பிறர் உரிமையைத் தகர்த்து அழிக்கும் செயலாகும். அமைதியை நேசிக்கும் ஒருவர் முதலில் சிந்தித்துப் பின்னர் செயல்படுபவராவார். மாறாக வன்முறையாளனோ முதலில் செயல்பட்டு விட்டுப் பின்னர் சிந்திப்பவனாவான். அமைதிச் செயல்பாடு என்பது தொடக்கம் முதல் இறுதி வரை நன்னம்பிக்கையின் அடிப்படையிலானதாகும். அதேசமயம் வன்முறையானது தொடக்கத்தில் தவறான எண்ணத்தின் அடிப்படையில் அமைந்து இறுதியில் வெறுப்பைத் தருவதாகும்.

அமைதியை நேசிக்கும் ஒருவர் உண்மையால் அமையப் பெற்றவராவார். வன்முறையை நேசிக்கும் ஒருவன் தவறான வகையில் அமையப் பெற்றவனாவான். அமைதியும் உடன்பாடான – ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளும் ஒன்றிணைந்து செயல்படுபவை. அதே சமயம் வன்முறையானது முழுக்க முழுக்க அழிவுச் செயல்பாடாகும். அமைதி இறுதியில் வெற்றியை அடையும் பொழுது வன்முறையோ கடுந்தோல்வி அடைகிறது. அமைதி வழிச் செயல்பாடு என்பது சட்ட நெறிமுறையிலானதாக இருக்கையில் வன்முறைச் செயல்பாடு சட்டத்திற்குப் புறம்பானதாக இருக்கிறது.

அமைதியை நேசிக்கும் ஒருவர் பிரச்சினைகளை மீறி கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்துகையில் வன்முறையில் நாட்டம் கொண்ட ஒருவரோ கிடைக்கும் வாய்ப்புகளைப் புறந்தள்ளிவிட்டுப் பிரச்சினைகளுக்காகப் பயனற்ற சண்டையில் போராட்டத்தில் சிக்கிக் கொள்கிறார். அமைதி வழியானது மலர்கள் பூத்துக் குலுங்கும் தோட்டத்தை உருவாக்குகையில், வன்முறைப் பாதையோ வெறுப்பு மற்றும் பகைமையைக் கொண்ட முட்கள் நிறைந்த காட்டை உருவாக்குகிறது.

அமைதி வழியில் இறைவனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்யும் அதே வேளையில், மனிதன் உட்பட இறைவனின் படைப்புகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் ஒருவர் ஆற்றுகிறார். வன்முறையோ, இறைமைக்கு மாற்றமானதாகவும் அதேநேரம் மனிதர்களின் உரிமைக்குப் பங்கம் ஏற்படும்படியாகவும் உள்ளது. அமைதி என்பது சொர்க்கம் என்றால் ஒப்பீட்டளவில் வன்முறை என்பது மோசமான நரகமாக உள்ளது. அமைதியைத் தேர்ந்தெடுப்பதே சரியான தேர்வாகும். அதேநேரம் ஒருவர் போரைத் தேர்ந்தெடுப்பாரேயானால் தேர்ந்தெடுக்கும் சோதனையில் அவர் தோற்று விட்டதையே காட்டுகிறது.

இந்த உலகில் பல விஷயங்கள் விரும்பத் தகாதவையாகவே உள்ளன. ஆனால் அவை இருப்பது நம்மைச் சோதிப்பதற்காகவே. உதாரணத்திற்கு மதுவை எடுத்துக் கொள்வோம். அது இருப்பது மக்கள் அதனைக் குடித்தேயாக வேண்டும் என்பதற்காக அல்ல. ஆனால் மக்கள் அதனை ஒதுக்கித் தள்ளி அதன் மூலம் அவர்களால் நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிய முடியும் என்பதை நிரூபிப்பதற்காகவே அது இருக்கிறது. இதே விஷயம் போருக்கும் கூடப் பொருந்தும். போரானது கைக்கொள்ள வேண்டிய ஒன்றுதான். ஆனாலும் அதனை ஒதுக்கிப் புறந்தள்ளுவதே மனிதர்களுக்கான சரியான செயலாகும்.

பண்டைக் காலங்களில் அப்போதைய சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தற்காப்புக்காகப் போர் புரிவது அனுமதிக்கப்பட்டதாக இருந்தது. அந்த அனுமதி என்பது தேவையின் பொருட்டானதாக இருந்தது. ஆனால் இப்போது இன்றைய மாறியுள்ள சூழ்நிலையில் போர் புரிய வேண்டிய அவசியம் இல்லை. அதனால்தான் போர் என்பதே இப்போது தேவையற்ற ஒன்றாகி விட்டது.

*பிரபஞ்சத்தின் கலாச்சாரம் என்பது அமைதிக் கலாச்சாரமாகும்.*

## சமாதானமே சிறந்தது

குறிப்பிட்ட இயற்கை நியதியைக் குர்ஆன் (04:128) பின்வருமாறு விளக்குகிறது. “சமாதானமே சிறந்தது” (அஸ்ஸுல்ஹு ஃகைர்) ‘ஸுல்ஹ்’ என்ற சொல்லுக்குச் சமாதானம், ஒத்துப் போதல் என்று பொருள். இரு சாராருக்கிடையில் பிரச்சினை ஏற்படுகையில் அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர். ஆனால் அவர்களால் இன்னொரு வழியைத் தேர்ந்தெடுக்க முடியும். அது உடனடியான

ஓர் உடன்படிக்கைக்கு வந்து பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்பதாகும். இதுவே சமாதானமாகி ஒத்துப் போவதாகும்.

இப்படி இரு சாராரின் விருப்பங்களுடன் சமாதானமாகிப் போவது என்பது மிகவும் அபூர்வமானது. பல பிரச்சினைகளில் சமாதானமாகப் போவது என்பது ஒருதலைப் பட்சமாகவே நிகழ்கிறது. அதாவது இரு சாராரில் ஒருவர் தங்களது விருப்பங்களைத் தள்ளி வைத்து விட்டு மற்ற சாராரின் விருப்பங்களுக்கு ஆதரவாகப் பிரச்சினையைத் தீர்ப்பது.

இவ்வாறு ஒருதலைச் சார்பான சமாதானம் 'சிறந்தது' என்று ஏன் சொல்லப்படுகிறது? பிரச்சினையான சூழ்நிலை ஆக்கப்பூர்வமான செயல்களுக்குப் பெருந்தடையாக இருக்கிறது. சமாதானமாகப் போவதற்கு ஒப்புக் கொள்வதன் மூலம் ஒருவரால் நேரம், வலிமை மற்றும் மூலாதாரங்களைப் பயனற்ற பிரச்சினைக்குச் செலவழிப்பதற்கு மாறாக ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் கவனம் செலுத்த முடியும். சமாதானத்திற்கு எதிரான எந்த ஒரு செயல்பாடும் எப்போதும் தவிர்க்க இயலாத அழிவுச் செயல்பாடாகவே இருக்கிறது. சமாதான வழிமுறை என்பது எல்லாவகையிலும் எப்போதும் பயனுள்ளதாக இருக்கிறது.

ஒரு பிரச்சினையில் மக்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் அது சமாதானமான வழிமுறையை மேற்கொண்டதால்தான் என்பது வரலாற்றை நோக்கும்போது உண்மையாக இருப்பது தெரியும். போராடுவதன் மூலமோ சண்டையிடுவதன் மூலமோ எந்தவொரு மனிதனும் ஒருபோதும் வெற்றியடைந்ததில்லை. சமாதானத்தின் முக்கியத்துவம் என்பது கிடைக்கும் வாய்ப்புகளில் முழு உரிமையைப் பயன்படுத்தும் வழிகளைத் தரும் என்ற உண்மையில் இருக்கிறது. ஆனால் அதே சமயம் போராடுவது மற்றவர்களை அழிப்பதில் ஒருவரின் சக்தியை வீணாக்குவதில் கொண்டு போய் விடுகிறது. அதன் விளைவாக எவ்வகையிலான ஆக்கப்பூர்வ செயல்பாடுகளிலும் ஒருவர் ஈடுபட இயலாததாகிறது. வெற்றியின் ரகசியம் என்பது நிலைத்து நின்று ஒருவர் தன்னை கட்டமைத்துக் கொள்வதில்தான் இருக்கிறதே தவிர, நிச்சயமாகக் கற்பனையான எதிரிகளை அழிப்பதில் அல்ல.

*முஸ்லிம்களின் அனைத்துச் செயல்களையும் குணங்களையும் இஸ்லாமியமானது என்று அவர்கள் முத்திரை குத்தவே கூடாது.*

## பூமியில் குழப்பம் உண்டாக்காதிருத்தல்

சிலவகையான செயல்பாடுகளைக் குர்ஆன் பின்வரும் வார்த்தைகளில் விளக்குகிறது.

> "அவன்தான் உங்களுக்காக பூமியை விரிப்பாகவும் வானத்தைக் கூரையாகவும் அமைத்தான்; உங்கள் உணவிற்காக வானத்திலிருந்து மழை பொழியச்செய்து அதன்மூலம் கனி வகைகளை வெளிப்படுத்துகிறான். எனவே (இவற்றையெல்லாம்) அறிந்திருந்தும் நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைகளைக் கற்பிக்காதீர்கள்". (02:22)

இந்தக் குர்ஆன் வசனம் மறுசீரமைப்புச் செயல்பாடுகளில் ஈடுபட்டும் சரியான முறையில் செயல்படாதவர்களைக் குறிக்கிறது. உண்மையான செயல்பாட்டில் அவர்களது முறை பூமியில் குழப்பம் விளைவிப்பதாக ('ஃபஸாத்') இருக்கிறது. அவர்களது செயல்முறை மக்களுக்கிடையே வெறுப்பை உண்டாக்கி, மக்களது அறநெறிசார் உணர்வுகளை பலவீனப்படுத்தி எதிர்மறையான சிந்தனைக்குப் போகும்படி செய்கிறது. அத்தகைய அனைத்துச் செயல்பாடுகளும் குர்ஆன் வசனம் கூறும் 'ஃபஸாத் ஃபில் அர்ள்' அல்லது பூமியில் குழப்பம் உண்டாக்குபவையாக உள்ளன. ஏனெனில் அச்செயல்பாடுகள் சமூக அமைதியை அழித்து, வன்முறையிலும் மோதல்களிலும் கொண்டுபோய் விடுகின்றன.

குர்ஆனின் இந்தப் போதனையிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவெனில், நல்லதொரு நோக்கத்திற்காகத் தொடங்கப்படுகிறது என்ற தோற்றத்தால் மட்டுமே ஒரு செயல்பாடு முறையானது, சரியானது என்று எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்பதுதான். இதற்கும் மேலாக சீரமைப்புச் செயல்பாடு என்ற பெயரில் செய்யப்படும் செயல்களின் முடிவுகளை மனதில் வைத்துக் கொள்வது மிகவும் தேவையான ஒன்றாகும். இத்தகைய செயல்பாடுகள் மக்களிடையே வெறுப்பு, பதற்றம், வன்முறை போன்றவற்றை உருவாக்குமேயானால் சமூகச் சீர்திருத்தம் என்று அழைக்கப்படும் செயல்பாடுகள் நிச்சயமாக அப்படியானவை அல்ல. சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அவை பூமியில் குழப்பத்தை உருவாக்கும் அழிவுச் செயல்பாடுகளே. அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்களைக் குற்றவாளிகள் என்றும் மனித குலத்தின் எதிரிகள் என்றும் நிச்சயமாக சீர்திருத்தவாதிகளோ மனித குலத்திற்கான சேவகர்களோ இல்லை என்றும் கருத வேண்டும்.

ஒரு செயல் தூய்மையான சீர்திருத்த முயற்சி என்று கருதப்பட வேண்டுமென்றால் அது அமைதி மற்றும் மனிதம் சார்ந்த வரையறைக்குள் மட்டுமே செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். சமூக அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவது, உயிர்களைக் கொன்று சொத்துக்களுக்கு நாசம் ஏற்படுத்துவது ஆகியவற்றை விளைவிக்கும் சீரமைப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் செயல்கள் தவறானவை. சீரமைப்பு என்ற பெயரில் செய்யப்படும் முயற்சிகள் அவை ஏற்படுத்தும் விளைவுகளின்படி உண்மையான சீரமைப்புகளை ஏற்படுத்துவது அவசியம். அதற்கு மாறாக அச்செயல்பாடுகளின் விளைவுகள் குர்ஆன் குறிப்பிடும் “பூமியில் குழப்பத்தை உண்டாக்குபவையாக” இருந்தால் அவர்களைக் குறிப்பிட்டுக் கூறும் எத்தகைய அழகிய சொற்களுக்கும் அப்பால் உண்மையில் அவர்கள் குழப்பவாதிகளே.

*இஸ்லாமிய போதனைகளைப் பின்பற்றாமல் தங்களை இஸ்லாத்திற்கான செயல்வீரர்கள் என்று கூறிக் கொண்டாலும் கூட அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த விதச் சம்பந்தமுமில்லை*

ஐஐஐ

## சதிச் செயல்களுக்கு முடிவு கட்டுதல்

*“(நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது அவர்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்துகிறது. உங்களுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அதனால் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். நீங்கள் பொறுமையை மேற்கொண்டு இறையச்சத்துடன் நடந்தால் அவர்களின் சூழ்ச்சி உங்களுக்குச் சிறிதும் தீங்கு விளைவிக்காது. அவர்கள் செய்து கொண்டிருக்கும் அனைத்தையும் அல்லாஹ் சூழ்ந்து அறிகிறான்”. (03:120)*

குர்ஆனின் இந்த வசனம் வாழ்க்கையின் மிக முக்கியமான உண்மையைக் குறிப்பிடுகிறது. தனி மனிதர்களுக்கோ ஒரு குழுவுக்கோவான உண்மையான பிரச்சினை என்பது அவர்களுக்கு எதிராக சதிச் செயல்களில் ஈடுபடும் எதிரிகளாக இருக்கலாம் என்பதல்ல. சரியாகச் சொல்வதெனில் தேவையான பொறுமையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்களா இல்லையா என்பதும் அவர்களுக்கு எதிராகச் செய்யப்படும் சதிச் செயல்கள் தோல்வியடையும்படியான முன்னெச்சரிக்கையுடன் அவர்கள் இருக்கிறார்களா என்பதும்தான்.

சதிச் செயல்களை மழையைப் போல நினைத்தால், பொறுமையும் இறையுணர்வும் வலுவான கூரையைப் போன்றதாகும். தங்கள் தலைகளுக்கு மேல் வலுவான கூரையை அமைத்துக் கொள்ளாமல் இருப்பதைக் குறித்துக் கவலைப்படாதவர்களுக்கு மட்டுமே மழை என்பது ஒரு பிரச்சினையாகும்.

போட்டியிடுதல் என்ற கொள்கையின் மீதே உலகம் ஓடிக் கொண்டிருக்கிறது. இதனால்தான் இயல்பாகவே சில வேளைகளில் தனி நபர்களுக்குள்ளும் குழுக்களுக்கு இடையேயும் போட்டிகள் உருவாகி ஒருவர் மீது ஒருவர் சதிச் செயல்களில் ஈடுபடும்படி ஆகிறது. அப்படியானதொன்று நிகழ்கையில் அதனை எதிரியின் சதி என்று கருதாமல் இயற்கையின் அடிப்படை நியதியின் வெளிப்பாடாகக் கருத வேண்டும். ஒரு சதிச் செயலை எதிரியின் வேலையாக நினைப்பது ஒருவரை வன்முறையில் ஈடுபடும்படிச் செய்து விடும். மாறாக, அதனை இயற்கை நியதி என்று ஒருவர் எடுத்துக் கொள்வாரேயானால் ஓர் அறிவார்ந்த மனிதன் மழைக்கு எதிராகச் செயல்படாமல் தனது வீட்டுக்கு ஒரு கூரையை அமைத்துத் தன்னைக் காத்துக் கொள்வது போல சதிச் செயல்களுக்கு இரையாகாமல் நற்சிந்தனைகளை வளர்த்து அறிவார்ந்த முடிவுகளை மேற்கொள்ளும்படிச் செய்யும்.

*சீரமைப்பு என்ற பெயரில் சமூக அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவது, உயிர்களைக் கொன்று சொத்துக்களுக்கு நாசம் ஏற்படுத்துவது தவறான செயல்களாகும்.*

ஐஐஐ

## தீவிரவாதத்திற்கு மறுப்பு

*குர்ஆன் நமக்குக் கூறுகிறது:*

*“வேதமுடையோரே! நீங்கள் உங்கள் மார்க்க(விஷய)த்தில் வரம்பு கடந்து சென்று விடாதீர்கள். அல்லாஹ்வைக் குறித்து உண்மையைத் தவிர வேறு எதையும் கூறாதீர்கள். மர்யத்தின் மைந்தர் இயேசு மஸீஹ் அல்லாஹ்வின் தூதரும் அவனது வார்த்தையும் ஆவார். அதை அவன் மர்யத்திடம் அளித்தான். அவர் அவனிடமிருந்து வந்த ஓர் ஆன்மாவே ஆவார். எனவே அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர்களின் மீதும் நம்பிக்கைகொள்ளுங்கள். “(தெய்வங்கள்) மூன்று” என்று கூறாதீர்கள். அவ்வாறு கூறுவதை விட்டுவிடுங்கள். அதுவே உங்களுக்குச் சிறந்ததாகும். அல்லாஹ் மட்டுமே ஒரே இறைவன்.*

அவனுக்கு மகன் இருப்பதாகச் சொல்லப்படுவதிலிருந்து அவன் மிகவும் (அப்பாற்பட்டுத்) தனித்துயர்ந்தவன். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனுக்கே உரியன. (அனைத்திற்கும்) பொறுப்பேற்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன்". (04:171)

இறைத்தூதரின் மொழியிலும் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது:

"மார்க்கத்தில் அளவு கடந்து செல்வதிலிருந்து உங்களைத் தடுத்துக் கொள்ளுங்கள். மார்க்கத்தில் அளவு கடந்து சென்றதாலேயே முன்னிருந்த சமுதாயங்கள் அழிந்து போயின".

இறைத்தூதரின் இந்த மொழி நஸாயி, இப்னு மாஜா மட்டுமின்றி இமாம் அஹ்மதின் முஸ்னதிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"குலூ" (ghulu) என்ற சொல்லுக்குத் தீவிரத்தன்மை என்று பொருள். எந்த ஒன்றிலும் தீவிரத்தன்மையைக் கொள்வது தவறானது. அது மதத்தின் உண்மையான தன்மைக்கு எதிரான தத்துவமாகும். தீவிரத்தன்மை மிக எளிதாக வன்முறைக்கும் மோதலுக்கும் வழிகோலும். தீவிரத்தன்மை என்ற மன நோய்க்கு இரையானவர்கள் மிதவாதத்தை ஏற்க மறுப்பார்கள். அவர்கள் அமைதியையும் மிதவாதத்தையும் தாழ்மையானதாகக் கருதி இகழ்கின்றனர். மேலும் அவர்கள் வன்முறையால் மிக எளிதாகக் கவரப்படுகிறார்கள். உயர்ந்த ஒரு நோக்கத்தை அடைகிறோம் என்ற பெயரில் அவர்கள் கடுமையான வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

தீவிரவாதத்திற்கு எதிரானது மிதவாதம். உங்களது சிந்தனை மிதவாதத்தன்மை கொண்டதாக இருந்தால் அமைதி என்ற நிலையிலேயே உங்கள் சிந்தனை இருக்கும். உங்களது அனைத்து முயற்சிகளும் அமைதி வழியிலேயே இருக்கும். மிதவாதமும் அமைதியும் மிகவும் நெருக்கமாகப் பிணைந்தவை. மிதவாதம் இருக்கும் இடத்தில் அமைதி நிலவும். அதே போல அமைதி இருக்கும் இடத்தில் மிதவாதம் நிலவும்.

மாறாக தீவிரவாதத் தன்மையானது ஒருவரைத் தீவிரவாதத்தை நோக்கியே இழுக்கும். தீவிரத்தன்மை மிக எளிதாக வன்முறைக்கும் மோதலுக்கும் இட்டுச் செல்லும். தீவிரத்தன்மையும் வன்முறையும் இப்படி ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகும். இதன் காரணமாகத்தான் தீவிரத்தன்மை என்பது சாதகமற்ற ஒன்றாக இஸ்லாத்தில் கருதப்படுகிறது. தீவிரத்தன்மையின் பக்கம் சாய்வது என்பது வன்முறைக்கு அடிமையாவதன் இன்னொரு பெயராகும்.

தீவிரத்தன்மையிலிருந்து தவிர்த்து இருத்தல் என்பது மிதத்தன்மையை வாஞ்சையுடன் வளர்த்துப் போற்றுவதாகும்.

'அமைதி' என்பதைப் 'போர்' என்பதுடன் இணைத்தே எப்போதும் நாம் பேசி வருகிறோம். ஆனால் அது அமைதியைக் குறித்த குறுகிய, சிறிய எல்லைக்குள்ளான விளக்கமாகும். உண்மை என்னவென்றால் அமைதி என்பது மனித வாழ்வு முழுவதிலும் ஆழமாக இணைந்த ஒன்று. அமைதி என்பது தன்னளவில் முழுமையான ஒரு தத்துவமாகும். அது எல்லாவித வெற்றிகளின் கதவுகளையும் திறக்கும் பெருஞ்சாவியாகும். ஒவ்வொரு முயற்சியும் வெற்றி பெறக் கூடிய சாதகமான சூழ்நிலையை அமைதி உருவாக்குகிறது. அமைதி இல்லை என்றால் சிறியதோ பெரியதோ எந்தவித உடன்பாடான செயல்பாடும் சாத்தியப்படாது.

குர்ஆன் நமக்குச் சொல்கிறது:

> *"இதன் காரணமாகவே "ஒரு கொலைக்குப் பதிலாகவோ பூமியில் கலகம் விளைவித்த காரணத்திற்காகவோ அன்றி ஒருவரைக் கொலை செய்கிறவர் மனிதர்கள் அனைவரையும் கொன்றவரைப் போன்றவர் ஆவார் (என்றும்) ஒருவரை வாழவைக்கிறவர் மனிதர்கள் அனைவரையும் வாழவைத்தவர் போன்றவர் ஆவார் என்றும் இஸ்ராயீலின் மக்களுக்கு நாம் விதிசெய்தோம். எமது தூதர்கள் அவர்களிடம் தெளிவான கட்டளைகளைக் கொண்டு வந்தனர். அதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்புமீறுபவர்களாகவே இருந்து வந்தனர்". (05:32)*

ஒருவரைக் கொலை செய்வது என்பது மிகவும் வெறுக்கத்தக்கக் கொடிய செயலாகும். சமூக அமைதிக்குத் தீர்க்க முடியாத அபாயமாக ஒருவன் ஆகிவிடும்போது மட்டுமே ஒருவன் கொலை செய்யப்படுவது சரியாகும். மிகவும் துல்லியமான நியாயம் இன்றி ஒருவரைக் கொல்வது என்பது மனித குலம் முழுவதையும் வெட்டிக் கொல்வதற்கு ஒப்பானதாகும். ஏனெனில் அத்தகைய செயல் வாழ்க்கை மீதான மதிப்பை தகர்த்தெறியும் செயலாகும்.

மது அருந்துதலைக் குறித்து இறைத்தூதரின் மொழியொன்று நமக்கு இப்படி கூறுகிறது. "ஒன்று அளவுக்கு அதிகமாகும் போது மயக்கத்தைக் கொடுக்கும் என்றால் அதன் சிறிய அளவு கூட தடுக்கப்பட்டதாகும்." இந்த கருத்துக் கொலை செய்வதற்கும் கூடப் பொருந்தும். ஒரு மனிதனைக் கொல்வது நிறைய மனிதர்களைக்

கொல்வது போன்ற பெரிய குற்றமே. இரண்டிற்கும் இடையில் சிறிய வேறுபாடு இருந்தபோதும், அச்செயலின் கொடிய தன்மையில் எந்த வேறுபாடும் இல்லை.

மேலே குறிப்பிட்டுள்ள குர்ஆன் வசனத்தின்படி அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் இஸ்லாம் மார்க்கம் அளிக்கும் பெரிய முக்கியத்துவத்தை ஒருவர் அறிந்துகொள்ள முடியும். ஒரு மனிதன் கொல்லப்பட்டால் மொத்த மனித இனத்தையே கொன்றது போல முழு சமூகமும் எதிர் வினையாற்ற வேண்டும் என்று இஸ்லாம் கோருகிறது.

*மார்க்கத்தில் அளவு கடந்து செல்வதிலிருந்து உங்களைத் தடுத்துக் கொள்ளுங்கள்.*

## வன்முறைத் தீயை அணைப்பது

*குர்ஆன் நமக்குக் கூறுகிறது:*

*"அவர்கள் (உங்களுக்கெதிராகப்) போர் நெருப்பை மூட்டும் போதெல்லாம் அல்லாஹ் அதனை அணைத்து விடுகிறான்". (05:64)*

இந்தக் குர்ஆன் வசனத்தைக் கொண்டு இறைவனின் படைப்புத் திட்டத்தை நாம் புரிந்து கொள்ளலாம். இந்தத் திட்டம் அமைதி என்னும் கொள்கையின் அடிப்படையிலானது என்பதையும் எவரேனும் ஒருவர் வன்முறைத் தீயை மூட்டினால் அமைதி என்பதைக் கொண்டு அத்தீயைப் பரவாமல் அணைக்க நாம் முயல வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளலாம். ஒரு சாரார் வெடிகுண்டுகளை வீசினால் அதே போல மறு சாராரும் ஒரு போதும் செய்யக் கூடாது. அப்படிச் செய்வது நிச்சயமாக முறையான வழி அல்ல. ஒருவர் வெடிகுண்டை வீசினால் நீங்கள் அதனைச் செயலிழக்கச் செய்வதே சரியான வழி முறையாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள குர்ஆன் வசனம் யாரோ ஒருவரால் வெடிகுண்டு வீசப்படும்போது, அதற்குப் பதிலடியாக வெடிகுண்டை வீசுவது என்பது இறைவன் விரும்பும்படியான செயலல்ல என்று சுட்டிக் காட்டுகிறது. அது போன்ற சூழ்நிலைகளில் அமைதிக்குப் பங்கம் ஏற்படாதபடி அதன் தொடக்கத்திலேயே அதனைச் செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதே நம்மிடம் இறைவன் விரும்புவதாகும்.

*சமூகத்தில் சாதகமற்றப் பல்வேறு சூழ்நிலைகளை ஒருவர் எதிர்கொண்டேயாக வேண்டும் என்பதே இயல்பான ஒன்றாக உள்ளது. இத்தகைய நிலையின்றி எந்தச் சமூகமும் ஒருபோதும் இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலைகளை இல்லாமலாக்குவது என்பது இதற்கான தீர்வல்ல. உண்மையான தீர்வு என்னவென்றால் முன்பே இருக்கும் பாதகமான சூழ்நிலையோடு விரும்பத்தகாத எதனையும் கூட்டிச் சேர்த்து விடக் கூடாது என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்வதே ஆகும். ஏற்கனவே இருந்து கொண்டிருக்கும் வெடிகுண்டுடன் இன்னொன்றையும் நாம் சேர்த்து விடக் கூடாது.*

*இப்படியாக பாதகமான நிலைமை இன்னும் மோசமாவதை தடுப்பதில் நாம் உதவ முடியும். அப்படி பாதகமான சூழ்நிலையை நம்மால் மாற்ற முடியும். இதுதான் பிரச்சினைக்கான உண்மையான பயனளிக்கக் கூடிய தீர்வாகும்.*

## சீர்திருத்தத்திற்குப் பின் போட்டி

*குர்ஆன் நமக்குக் கூறுகிறது:*

*“மத்யன் (நகர மக்கள்)பால் நாம் அவர்களின் சகோதரர் ஷுஐபை (த்தூதராக) அனுப்பினோம். அவர் “என் சமூகத்தோரே! அல்லாஹ்வையே வணங்குங்கள், அவனையன்றி உங்களுக்கு வேறு இறைவன் இல்லை. உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவான சான்று வந்துவிட்டது. எனவே அளவையும் எடையையும் (சரியாக அளந்தும் நிறுத்தும்) நிறைவாக்குங்கள். மக்களுக்கு அவர்களின் பொருள்களைக் குறைத்து விடாதீர்கள்; உலகில் சீர்திருத்தம் ஏற்பட்டபிறகு குழப்பம் உண்டாக்காதீர்கள்; நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு நன்மை பயப்பதாகும்” என்று கூறினார்”. (07:85)*

*இந்த உலகம் பூரணமாகக் குறைவின்றி படைக்கப்பட்டுள்ளது என்ற இயற்கையான உண்மையை இக்குர்ஆன் வசனம் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இங்கே உள்ள ஒவ்வொன்றும் அதன் விருப்பத்தின்படியான திட்டத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவென்றால் இயற்கையில் அமைந்துள்ள சமநிலைக்குப் பங்கம் விளைவிக்காமல் மனிதர்கள் இந்த உலகில் சீர்தூக்கிய சமநிலையில் செயல்பட வேண்டும் என்பதாகும். இயற்கைச் சமநிலைக்குப் பங்கம் விளைவிப்போமேயானால் அது பெரும் அழிவுக்கு இட்டுச் செல்லும்.*

இயற்கை முறை சமநிலையையொட்டி இந்த உலகில் ஏராளமான செயல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பூமி நில்லாமல் தனக்குத் தானே சுற்றிக் கொண்டும் வலம் வந்து கொண்டும் இருக்கிறது. சூரியன் இந்த உலகின் மீது தொடர்ந்து ஒளி வீசிக் கொண்டே இருக்கிறது. காற்றடிக்கிறது, மழை பொழிகிறது, நதிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மரங்களும் செடி கொடிகளும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். எந்த வித இடையூறும் இன்றி இத்தகைய ஏராளமான செயல்பாடுகள் இரவும் பகலும் மிகவும் அமைதியான முறையில், எந்த வித வன்முறையோ மோதலோ இல்லாமல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இது இயற்கையின் திட்டமாகும். அதன்படியே மனிதர்கள் வாழ வேண்டும். எனவே நாம் வன்முறையிலிருந்து முற்றிலுமாக விலகித் தவிர்ந்து அமைதி என்ற கொள்கையின் அடிப்படையில் நமது முழு வாழ்வையும் கொண்டு செல்ல வேண்டும். இதற்கு மாறாக வாழ்பவர்களைக் குர்ஆன் "பூமியில் குழப்பம் உண்டாக்குபவர்கள்" என்று கூறுகிறது. அவர்கள் நிச்சயமாக எந்தச் சீரமைப்புப் பணியிலும் ஈடுபடுபவர்களில்லை.

*ஒரு மனிதனைக் கொல்வது பல மனிதர்களைக் கொல்வது போன்ற பெரிய குற்றமே.*

## மோதலைத் தவிர்த்தல்

குர்ஆன் நமக்குக் கூறுகிறது:

"(நபியே!) நீர் மன்னிப்பதைக் கடைப்பிடிப்பீராக! நன்மையை(க் கடைப்பிடிக்க மக்களை) ஏவுவீராக! மூடர்களிடமிருந்து விலகி விடுவீராக!". (அல்குர்ஆன் 07:199)

தவிர்ப்பது என்பதற்கு எதிரானது மோதல். மோதலைத் தவிர்ப்பது ஒருவரை அமைதியின் எல்லைக்குள்ளேயே நிறுத்தி வைக்கும். அதே சமயம் மோதுதல் என்பது இரு சாராருக்குள் வன்முறையைத் தோற்றுவிக்கும். மனிதனோ குழுவோ எவரும் இந்த உலகில் தனியாக வாழ முடியாது. அவரவருக்கேயான நோக்கங்கள் மற்றும் தனித்தனியான திட்டங்களுடன் பலருடன் மக்கள் இணைந்து வாழ வேண்டியுள்ளது. இதனால்தான் மக்கள் மற்றும் குழுக்களிடையே அடிக்கடி மோதல்களும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்பட இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று சச்சரவுகளைத் தவிர்த்தல், மற்றொன்று மோதல். மூன்றாவது வழி எதுவுமேயில்லை. மோதல் போக்கை ஒருவர் தேர்ந்தெடுத்தால் அது சண்டையிடுவதில் கொண்டு போய் விடும். சண்டையிடுதல் என்பது உணர்ச்சிக் கொந்தளிப்பிற்கு வடிகாலாக அமையுமே ஒழிய உண்மையான எந்தப் பலனையும் அளிக்காது என்பது மனித குல வரலாறு முழுவதும் உள்ளது. எனவேதான் ஒருவர் மோதல் போக்கை மனப்பூர்வமாகத் தவிர்க்க வேண்டும். இத்தகைய தவிர்க்கும் முறை மேலும் சேதப்படுவதிலிருந்து ஒருவரைக் காக்கும் என்பது மட்டுமல்லாமல் வளர்ச்சிக்கான தடைகளேதுமற்ற வழியில் பயணிக்கும் வாய்ப்பையும் தரும். அத்தகைய தவிர்க்கும் முறை செயலற்ற தன்மை போல எதிரணிக்குத் தோன்றலாம். ஆனால் அதன் பலன் என்பது ஒருவரைப் பயனற்ற மோதலிலிருந்து காத்து எந்தத் தடையுமற்று அவரை அவரது வழியில் பயணிக்கச் செய்யும்.

வெற்றி பொறுமையுடன் இணைந்துள்ளது.

## வெற்றியின் ரகசியம் பொறுமை

குர்ஆன் நமக்கு அறிவுறுத்துகிறது:

“ஆகவே பொறுமையைக் கடைப்பிடியுங்கள். உறுதியாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்”. (08:46)

நாம் விரும்பாதவை நிகழும் பொழுது பொறுமையாக இருப்பது மிகவும் பலன் உள்ளதாகும். என்று இறைத்தூதர் கூறியதாக இமாம் அஹ்மது அவர்களின் முஸ்னதில் காணப்படுகிறது. பொறுமையுடன் வெற்றி இணைந்துள்ளது. கடினத்துடன்தான் இலகுவானதும் இருக்கிறது என்றும் இறைத்தூதர் கூறினார்கள்.

மக்கள் கடினமான சூழ்நிலையை எதிர் கொள்ளும் போதோ கசப்பான சம்பவங்களை அனுபவிக்கும்போதோ அதனைக் கடப்பது என்பது அடிக்கடி நிகழ்வதாகும். சில நிலைகளில் அவர்கள் வன்முறையைக் கைக்கொள்ளலாம். இத்தகைய செயல்பாடு இயற்கையைப் பற்றிய அறியாமையின் நிகழ்வாகும். உண்மையையும் நீதியையும் உறுதியாக நிலைப்படுத்துபவர்களையே இயற்கை நியதி எப்போதும் ஆதரிக்கும் என்பது உண்மையாகும். அத்தகைய தனி நபர்களோ குழுவினரோ பதற்றமின்றி பொறுமையுடன் செயல்படுவார்களேயானால் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். வெற்றி நிச்சயமாக அவர்களைப் பின் தொடரும்.

குர்ஆன் வசனப்படி பொறுமைக்கு எதிரானது அவசரப்படுவதாகும். பொறுமையான முறையில் செயல்படுபவர்கள் இயற்கைத் திட்டத்தை பின்பற்றுபவராவார். இயற்கைத் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் ஒருவர் வெற்றி பெறுவது என்பது நிச்சயமாக இயலாத ஒன்றாகும்.

*எனவே நாம் வன்முறையிலிருந்து முற்றிலுமாக விலகித் தவிர்ந்து அமைதி என்ற கொள்கையின் அடிப்படையில் நமது முழு வாழ்வையும் கொண்டு செல்ல வேண்டும்.*

## சச்சரவிடாதிருத்தல்

குர்ஆன் நமக்குக் கூறுகிறது:

*"(நபியே!) நாம் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு வழிபாட்டுமுறையை ஏற்படுத்தினோம். அவர்கள் அதனைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். எனவே இது குறித்து அவர்கள் உம்முடன் வாதிட வேண்டாம். உம் இறைவனின்பால் (அவர்களை) அழைப்பீராக! உறுதியாக நீர் நேரான வழியில் இருக்கின்றீர்". (22:67)*

இந்தக் குர்ஆன் வசனத்திலிருந்து நாம் அறிந்து கொள்வது என்னவெனில், எவருடனும் பிணங்க வேண்டாம் என்றால் சச்சரவை உண்டு பண்ணும் வாய்ப்பை எவருக்கும் வழங்க வேண்டாம் என்பதாகும். அதாவது இரு சாராருக்கிடையில் முரண்பாடுகள் தோன்றினால் அதனை அவர்கள் அமைதி வழிப் பேச்சுவார்த்தை என்ற எல்லைக்குள்ளேயே வைத்துக்கொள்ள வேண்டும். அந்த முரண்பாடுகள் வன்முறையாக உருவெடுக்காமல் அவற்றின் தொடக்க நிலையைத் தாண்டிச் செல்லும்படி அவர்கள் ஒரு போதும் விடக் கூடாது.

இந்த உலகில் தனி நபர்களுக்குள்ளும் குழுக்களுக்கு இடையேயும் பதற்றங்கள் நிலையாகத் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய பதற்ற நிலை இயல்பானதே. இது ஒவ்வொரு இடத்திலும் எல்லாவகைச் சூழ்நிலைகளிலும் சம்பவிக்கிறது. இங்கு நாம் உண்மையில் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் இந்தப் பதற்றங்களும் வேறுபாடுகளும் எல்லை கடந்து போய் விடாதிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைத்தான். எல்லை தாண்டினால் இந்த வேறுபாடுகள் உடல் ரீதியான வன்முறையில் கொண்டு போய் விடும். அவை தம் எல்லைகளுக்குள்ளேயே நின்று விட்டால் எந்த வேறுபாடுகளும்

தவறானவை அல்ல. ஆனால் அவற்றின் எல்லைகளைக் கடப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகிறது.

மேலே கூறப்பட்ட குர்ஆனின் வசனம் ஒரு மனிதன் தான் வாழும் வாழ்க்கையில் மதிப்புமிக்க உடன்பாடான நோக்கத்தால் எப்படி உந்தப்படுகிறான் என்பதை நமக்குக் கூறுகிறது. அப்படிப்பட்ட மனிதன் தனது நோக்கத்தை மற்றவர்களுடன் கூடி ஆலோசிப்பதன் மூலம் மட்டுமே வெற்றி பெற முடியும். வேறு வகையில் ஆலோசிப்பது என்பது பலனளிக்காத ஒன்றாகவே அமையும்.

வாழ்க்கையில் உடன்பாடான நோக்கத்தால் உந்தப்பட்ட ஒரு மனிதன் மற்றவர்களுடனான தனது உறவில் சச்சரவற்ற – பிரச்சினைகளற்ற சூழ்நிலையை எப்படி உருவாக்க முடியும் என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது. இதற்கான பதில், ஒரு தலைப்பட்சமாக அம்மனிதன் பொறுமையைக் கைக்கொள்ளும்போது மட்டுமே அத்தகைய சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதுதான். நடைமுறையில் பார்த்தால் வேறு வழி என்பதே இல்லை. வாழ்க்கையில் நன்நோக்கமுள்ள ஒரு மனிதன் ஒரு தலைப்பட்சமாகச் சச்சரவுகள் – மோதல்களைத் தவிர்க்கும் கொள்கையைக் கைக்கொண்டு அதன் மூலம் மற்றவர்களுடன் உள்ள உறவில் சமமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டால் அவனது பயணம் தடையின்றி தொடரும்.

> *சமூகத்தில் சாதகமற்ற பல்வேறு சூழ்நிலைகளை ஒருவர் எதிர்கொண்டேயாக வேண்டும் என்பதே இயல்பான ஒன்றாக உள்ளது.*

## போர் என்பது தற்காப்புக்காக

குர்ஆன் நமக்குக் கூறுகிறது:

“போர் தொடுக்கப்பட்டோருக்கு அவர்கள் அநீதி இழைக்கப்பட்டிருப்பதனால் எதிர்த்துப் போரிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உறுதியாக அல்லாஹ் அவர்களுக்கு உதவிபுரிய ஆற்றலுடையவன்”. (22:39)

குர்ஆனின் இந்த வசனம் சர்வதேச மற்றும் சர்வ சமய உறவுகள் குறித்த ஒரு கொள்கையை நமக்குக் கற்பிக்கிறது. அதாவது, அடக்குமுறையிலான போர் தொடுக்கப்பட்டால் பாதுகாப்பிற்காகச் சண்டையிடுதல் என்பது நியாயமானதாகும். மற்ற வகையிலான அனைத்துப் போர்களும் ‘ஜுல்ம்’ எனப்படும் அடக்கி ஒடுக்குதலாகும்.

அடக்கி ஒடுக்குபவர்களுக்கு இறைவனின் உலகில் இடமில்லை. இந்தக் குர்ஆன் வசனத்தின்படி, தற்காத்துக் கொள்வதற்காகப் போர் புரிவதைத் தவிர மற்றெல்லா வகைப் போர்களும் அவை எப்படிப்பட்டவையாக இருப்பினும் நியாயமானவை அல்ல.

குர்ஆனின் கூற்றுப்படி, தற்காப்பிற்கான போர் என்பது தெளிவாக அறிவிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட பிறகே செய்யப் படலாம். அறிவிக்கப்படாத – பிரகடனப் படுத்தப்படாத போருக்கு இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதி இல்லை. இன்னும் சொல்லப்போனால் தற்காப்பிற்கான போர் என்பது முறையாக அமையப்பெற்ற அரசாங்கத்தாலேயே செய்யப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய நெறியாகும். அரசாங்கம் அல்லாத ஆட்கள் எந்தக் காரணமானாலும் போர் தொடுப்பது என்பதற்கு இஸ்லாத்தில் அனுமதி இல்லை. இவற்றையெல்லாம் மனதில் கொண்டால் குர்ஆனில் கூறப்பட்டுள்ள போர் பற்றிய விதிகளின்படி தற்காப்பிற்கல்லாத நிர்ப்பந்தத்தினாலான மற்றெல்லா வகைப் போர்களும் இஸ்லாமிய மார்க்கத்தில் நியாயமற்றவையே.

உண்மையில் போர் என்பது வெறுக்கத்தக்க இழிவான ஒன்றாகும். என்றும் அழியாத இயற்கை விதியின்படி அமைதி என்பதே பொதுவான விதி அல்லது நெறியாகும். அதே சமயத்தில் போரோ விதி விலக்கானதாகும். ஒருவர் தன்னைக் காத்துக் கொள்ளும்படியான தீவிரமான தேவையினால் மட்டுமே போரை நாடலாம். அதுவும் கூட மோதலைத் தவிர்ப்பதற்கான சாத்தியமான அனைத்து வழிகளிலும் முயற்சிகள் செய்யப்பட்டு அவை தோல்வியுற்ற பின்னரே போர் புரியும் வழியை நாடலாம்.

குர்ஆன் நமக்கு இப்படி அறிவுறுத்துகிறது:

“ஆகவே பொறுமையைக் கடைப்பிடியுங்கள். உறுதியாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்”. (08:46)

பொறுமையின் வழி என்பதை அமைதியின் வழி என்றும் சொல்ல முடியும். அமைதி வழியில் நடப்பவர்களுக்கு அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் இயற்கை உதவும் என்ற இயற்கையின் விதியை மேலே குறிப்பிட்டுள்ள குர்ஆன் வசனம் நமக்குக் கூறுகிறது. ஆனால் வன்முறையைக் கையிலெடுப்பவர்களுக்கு இயற்கையின் உதவி மறுக்கப்படுகிறது. அத்தகையவர்கள் இவ்வுலகில் பெறுவது தோல்வியும் அழிவுமேயல்லாது வேறொன்றுமில்லை.

பொறுமை வழியில் நடப்பது என்பதன் பொருள் என்ன? கடினமான அல்லது பாதகமான சூழ்நிலைகளில் ஒரு மனிதன் தனது

சகிப்புத்தன்மையை இழக்காமல் அவனது உடன்பாடான சிந்தனை குலையாமல் நிலை நிறுத்திக் கொள்வதுதான் இதன் பொருளாகும். அவன் சாத்தியமானதற்கும் சாத்தியமற்றதற்குமான வேறுபாட்டை அறிந்து, எது சாத்தியம் என்று அவன் அறிந்து வைத்திருக்கிறானோ அவ்வழியில் தன் பயணத்தைத் தொடங்குகிறான். உடனடியான விளைவுகளைப் பிடித்துக் கொண்டு அவன் தொங்கிக் கொண்டிருப்பதில்லை.

சரியாகச் சொன்னால் அவன் படிப்படியாக முன்னேறும் வழியைக் கைக்கொள்கிறான். நஷ்டங்கள் ஏற்படுகையில் அவன் மனதை விட்டு விடுவதில்லை. மாறாக எதிர்காலத்தை மனதில் கொண்டு அவன் முன்னேறிச் செல்கிறான். நிகழ்காலம் அவனுக்குத் தருவதை ஏற்றுக் கொள்கிறான். அவனுக்கு எதிர்காலத்தில் கிடைப்பது என்னவாக இருக்கலாம் என்பதில் காத்திருந்து பார்ப்போம் என்ற அணுகுமுறையைக் கைக்கொள்கிறான். இயற்கை நியதிகளை தன் விருப்பங்களுக்கு இரண்டாம் பட்சமாக வைக்க முயலாமல் இயற்கையின் நியதிகளின்படித் தன் விருப்பங்களை அமைத்துக் கொள்கிறான்.

பொறுமை என்பது முழுமையான – உடன்பாடானச் செயல்பாடாகும். அது எதிர்மறையான செயல்பாடோ மந்தமானதோ, செயலற்றதோ அல்ல.

> எல்லைகளுக்குள்ளேயே அவை நின்று விட்டால் எந்த வேறுபாடுகளும் தவறானவை அல்ல. ஆனால் அவற்றின் எல்லைகளை அவை கடப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகிறது.

## அமைதி வழியில் கொள்கையைப் பரப்புதல்

குர்ஆன் கூறுகிறது:

“எனவே நீர் (ஓரிறை)மறுப்பாளர்களுக்குக் கீழ்ப்படியாதீர். (குர்ஆனாகிய) இதன் மூலம் அவர்களிடம் (இறைச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதற்காகக்) கடும்முயற்சி மேற்கொள்வீராக!” (25:52)

குர்ஆன் என்பது கொள்கைகளின் நூலே அன்றி வாளல்ல. எனவே குர்ஆனின் கூற்றுப்படி ஜிஹாத் செய்வது என்பது, குர்ஆனின் போதனைகளை மற்றவர்களிடம் கொண்டு செல்வது, குர்ஆனின் செய்திகளை மக்களிடையே அமைதியான முறையில் பரப்புவது மக்கள் ஏற்க முடியும் என்ற வகையில் குர்ஆனிய கொள்கைகளைப் போதுமான நிரூபணங்களுடன் தெரிவிப்பது என்பதாகும்.

இஸ்லாத்தில் ஜிஹாத் எனப்படுவது அமைதியான முறையில் போராடுவதே என்பதைக் குர்ஆனிய வசனம் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. அதற்கும் வன்முறைக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. 'ஜிஹாத்' என்ற அரபு மொழிச் சொல்லின் பொருள் கடினமான பெரும் முயற்சி – குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சாத்தியமான அளவுக்குப் பாடுபட்டுக் கடுமையாக உழைப்பது என்பனவாகும்.

குர்ஆனின் இந்த வசனம் மூலம் வன்முறையிலான முயற்சிகளை விட அமைதி வழி முயற்சிகள் மிக உயர்ந்தவை என்பதை நாம் அறிகிறோம். வன்முறையை ஒருவர் கைக்கொள்வாரேயானால், அவர் முயற்சி செய்யக்கூடிய வாய்ப்புகள் குறைந்த எல்லைக்குள்ளானவையாக ஆகின்றன. ஆனால் அவரே அமைதி வழிமுறைகளைக் கையாள்வாரேயானால், அந்த வாய்ப்புகள் அளவே இன்றிப் பெருகுகின்றன. வன்முறை வழியில் ஒரு வாளோ துப்பாக்கியோதான் பயன்படத்தக்கதாக இருக்கும். அதே சமயத்தில் அமைதி வழியில் ஒவ்வொன்றும், ஏன் ஒரு பேனா கூட நல்லுயர் நோக்கத்தை அடையக் கூடிய பயன்மிக்கதாக இருக்கும்.

*வன்முறையைக் கையிலெடுப்பவர்களுக்கு இயற்கையின் உதவி மறுக்கப்படுகிறது.*

ஜஜஜ

## உங்கள் எதிரியை நண்பராக்குவது

*குர்ஆன் கூறுகிறது:*

*"நன்மையும் தீமையும் சமமாகமாட்டா. (ஆகவே, நபியே!) மிகச்சிறந்த நன்மையைக் கொண்டு (தீமையைத்) தடுப்பீராக! அப்போது உம்முடன் பகைமை கொண்டிருந்தவர்கூட உற்ற நண்பரைப்போல ஆகிவிடுவதை நீர் காண்பீர்!". (41:34)*

குர்ஆனின் இந்த வசனம் நமக்கு இயற்கையின் ரகசியங்களில் ஒன்றைத் தெரிவிக்கிறது. அதாவது ஒவ்வொரு மனித எதிரிக்குள்ளும் ஒரு நண்பர் இருப்பார். மறைந்திருக்கும் அந்த நண்பரை நாம் நிச்சயம் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்பதுதான் அது. இதனை நாம் செய்தோமேயானால் உண்மையிலேயே ஓர் அற்புதம் நிகழும். நமது நிலையான மாறாத எதிரியாக நமக்குத் தோன்றியவர் நமக்கு மிகவும் நெருக்கமான நண்பராகி விடுவார்.

உண்மை என்னவென்றால் பகைமை என்பது இயல்பானதோ உண்மையானதோ அல்ல. அது செயற்கையான ஒரு எதிர்வினையே ஆகும். எப்பொழுதாவது எந்தக் காரணத்திற்காகவாவது யாரோ

ஒருவர் உங்களுக்கு எதிரியாக மாறினாலும் நீங்களும் அவருடன் அதே மாதிரி எதிர்வினை ஆற்றிவிடக் கூடாது. அவரிடம் நீங்கள் ஒரு தலைப்பட்சமாக நடக்க வேண்டி இருந்தாலும்கூட, உங்கள் கற்பனையான எதிரியின் நடத்தை பகைமை வாய்ந்ததாக இருந்தாலும் கூட அன்புடனும் நல்லதன்மையுடனே நடக்க வேண்டும்.

ஒருதலைப்பட்சமான இந்த நன்னடத்தை உங்களை எதிர்ப்பவர்களின் எதிர்மறையான உணர்ச்சிகளைக் குறைத்து விடும். அவரது இதயத்தின் ஆழத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் மனிதத்துவத்தின் சுடரை அது தூண்டி விடும். அது அவரைப் புது மனிதனாக்கி விடும் அல்லது குர்ஆனின் வார்த்தைகளில் கூற வேண்டுமென்றால் அது அவரை உங்களுக்கு மிகவும் பிரியமான நண்பராக்கி விடும்.

உண்மை என்னவென்றால், ஒவ்வொரு மனிதனும் பொதுவான இயல்புடனே பிறக்கின்றான். நமது பொது இயல்பு, எதிரிகளையும் நண்பர்களையும் இணைப்பதாக உள்ளது. இதன் பொருள் என்னவென்றால் உங்களது கற்பனையான எதிரியிடம் இருக்கும் அடிப்படை மனித இயல்பை நீங்கள் பங்கிட்டுக் கொள்கிறீர்கள் என்பதுதான். ஆதலால், உங்களுக்குப் பகைமை போல் தோன்றுவதைத் தாண்டி உங்களது கற்பனையான எதிரியிடம் கூடப் பொதுவான மனிதத்துவத்தை நீங்கள் அவசியம் தேட வேண்டும்.

> *ஒரு தலைப்பட்சமான இந்த நன்னடத்தை உங்களை எதிர்ப்பவர்களின் எதிர்மறையான உணர்ச்சிகளைக் குறைத்து விடும்.*

## நமது செயல்களின் விளைவு

*“(மக்களே!) உங்களுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அது உங்கள் கைகள் தேடிக் கொண்ட(தீய)வற்றின் விளைவேயாகும். அவன் பெரும்பாலான தவறுகளை மன்னித்து விடுகிறான்”. (42:30)*

மேலே உள்ள இந்தக் குர்ஆன் வசனம் அடிப்படையான உண்மையை விளக்குகிறது. அதாவது, இந்த உலகம் காரண கொள்கை என்பதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. காரணம் என்னவோ அதன்படியே விளைவும். இந்த வசனம் எதனை நமக்குக் கற்பிக்கிறது என்றால், ஏதாவதொரு துன்பத்தை நாம் எதிர்கொள்ளும்போது அதற்கான காரணத்தை வெளியில்

எங்கும் தேடுவதற்கு மாறாக, அதனை நமக்குள்ளேயே கண்டுபிடிக்க வேண்டும் என்பதைத்தான்.

இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து இதனை ஆழமாக அறிந்திருந்தால் ஒரு மனிதன் தனது துன்பங்களுக்கு ஒருபோதும் மற்றவர்களைக் குறை கூறாமலும் அவர்கள் மீது வன்முறையைக் காட்டாமலும் இருப்பான். மாறாக, எந்த நிபந்தனையும் இன்றி தனது சொந்த வாழ்க்கையை ஆராய்வதில் மட்டுமே ஈடுபடுவான். தனது சொந்தத் தவறுகளை அவன் கண்டுபிடிப்பான். அவற்றை அவன் சரி செய்வதன் மூலம் மேலும் பிரச்சினைகள் அவனுக்கு நேர்வதிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அவனால் முடியும். ஒருவர் தன்னுடைய சொந்தப் பிரச்சினைகளுக்காக மற்றவர்களைக் குறை கூறுவதும் தாக்குவதும் என்பது நோயுற்ற ஒரு மனிதன் தனது நோய்க்காகத் தனது அண்டை வீட்டுக்காரரைக் குறை கூறி அவருடன் சண்டைக்குப் போவது போன்றதாகும்.

குறிப்பிட்ட சில நகரங்களின் போக்குவரத்து விதிகளின்படி நீங்கள் வலது பக்கமே செல்ல வேண்டி இருக்கும். அதனை விடுத்து இடது பக்கம் நீங்கள் சென்றால் விபத்தில் சிக்கும்படியாகி விடும். ஏதேனும் வண்டி உங்கள் மீது மோதி விடலாம்.

இன்னொரு வண்டி வந்து உங்கள் மீது மோதியதால் இந்த விபத்து நேரிட்டது போலத் தோன்றலாம். இது உங்களால் நிகழ்ந்ததல்ல என்றும் அந்த வண்டியின் ஓட்டுநராலேயே அது நிகழ்ந்ததென்றும் உங்கள் வண்டி மீது அவர்தான் மோதி உங்களைக் காயப்படுத்தினார் என்றும் கூற நிச்சயமாக உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நீங்கள் தவறான பக்கம் சென்றதன் காரணத்தால் தவறு உங்களுடையது என்பதையும், முறையான பக்கம் வந்து கொண்டிருந்தவரின் தவறாக இருக்க முடியாது என்பதையும் நீங்கள் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

இது நமது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களுக்கும் பொருந்தக் கூடிய உண்மையாகும். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் நஷ்டத்தையோ துரதிர்ஷ்டத்தையோ நேரிடும் பொழுதும் உங்களது தவறான செயல்பாடுகளினால் அது நிகழ்ந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதுவே வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கான சரியான முறையாகும். இந்தச் சரியான வழியில் நீங்கள் சிந்திப்பீர்களேயானால் உங்களை நீங்களே சீரமைத்துக் கொள்ளலாம். ஆனால் இதற்கு மாறாக, உங்களுடைய துன்பங்களுக்கெல்லாம் மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டிருந்தீர்களேயானால் நீங்கள் உங்கள் எதிர்காலத்தைக்

கெடுத்துக் கொள்வீர்கள். அப்படி இருக்கும் பட்சத்தில் உங்கள் கடந்த காலமும் நிகழ்காலமும் முன்பே கேடாகியிருக்கும்தான்.

> *ஏதாவதொரு துன்பத்தை நாம் எதிர்கொள்ளும்போது அதற்கான காரணத்தை வெளியில் எங்கும் தேடுவதற்கு மாறாக அதனை நமக்குள்ளேயே கண்டுபிடிக்க வேண்டும்.*

ஸ்ஒஸ்ஒஸ்ஒ

## கோபம் என்பது பலவீனமே

*"(நம்பிக்கையாளர்களாகிய) அவர்கள் பெரும் பாவங்களையும் மானக்கேடான செயல்களையும் விட்டு விலகிக் கொள்வர்; (மேலும்) தாங்கள் சினமூட்டப்படும் போதும் (சினமூட்டியவரை) மன்னித்துவிடுவர்". (42:37)*

இதன் பொருள் மன்னித்து மறந்து விடுதல் மட்டுமல்ல. மனதில் எழும் கோபத்தை அடக்கி ஆண்டு, அதன்படி நடந்து கொள்வதையும்தான் கூறுகிறது. கோபத்தால் உந்தப்பட்டு அதன்படி செயல்புரியாமல் கோபம் என்ற உணர்ச்சியை ஒதுக்கித் தள்ளி சிந்திப்பது என்பது இதன் பொருளாகும். அதாவது கோப உணர்ச்சி ஆட்கொள்ளாமல் ஒரு சூழ்நிலைக்கு எதிர்வினையாற்றுவதும் இதன் பொருளாகும்.

கோபம் என்பது பலவீனமாக இருக்கிறது. அதே வேளையில் கோபப்படாமல் இருப்பது என்பது ஆற்றலோடு இருப்பது என்பதாகிறது. ஒருவர் கோபப்படாமல் இருப்பாரேயானால் அவரால் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க முடியும். ஒவ்வொன்றையும் தனக்குச் சாதகமானதாக மாற்ற அவரால் முடியும். கோபம் ஒருவருடைய நுட்பமான அறிவை அழித்து விடுகிறது. கோபமடைந்துள்ள மனிதர் ஒருவரால் அவர் எதிர்கொள்ளும் சூழ்நிலையையும் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றபடி சரியாக அவரால் செயல்படவும் முடியாது. எந்தப் பிரச்சினைக்கும் வன்முறை தீர்வாகாது என்றபோதும், அவர் உடனடியாக வன்முறையில் ஈடுபடும்படியாகும். இதற்கு நேர்மாறாக, கோபத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடிந்த ஒருவர் அமைதியான வழியில் தீர்வைத் தருவார். மேலும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் அமைதியான தீர்வே மிகவும் சரியான தீர்வாகும்.

ஏராளமான திறன்களைக் கொண்ட பொக்கிஷம் மனித மனத்தினுள் ஒளிந்திருக்கிறது. ஒருவர் கோபம் கொள்ளாமல் இருப்பாரேயானால் மனதிற்குள்ளிருக்கும் இந்தப் பொக்கிஷங்களை

அவருக்குச் சாதகமாக அவரால் பயன்படுத்த முடியும். ஆனால் ஒரு மனிதர் கோபமடையும் பொழுது அவரது மனதின் சமநிலை பாதிப்படைகிறது. இந்த மனத்திறன்கள் என்னும் பொக்கிஷத்தை அவரால் பயன்படுத்த இயலாமல் போகிறது.

கோபப்படாமல் இருப்பது பெரும் வெற்றியாகும். அதே சமயத்தில் கோபப்படுவதோ பெரும் தோல்வியாகும்.

*கோபம் என்பது பலவீனம். கோபப்படாமல் இருப்பதென்பது ஆற்றலோடு இருப்பது.*

## பொறுமையாக இருந்து உண்மையை நோக்கிச் செல்லுதல்

குர்ஆனில் ஒரு வசனம் (103:03) நஷ்டமடைவதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்பவர்களைப் பற்றி நமக்குக் கூறுகிறது.

“ஆயினும் யார் (இறை) நம்பிக்கைகொண்டு, நற்செயல்கள் புரிந்து, ஒருவருக்கொருவர் சத்தியத்தை அறிவுறுத்திக் கொண்டும் பொறுமையை(க் கடைப்பிடிக்க) அறிவுறுத்திக் கொண்டு இருக்கிறார்களே அவர்களைத் தவிர! (இத்தகையோர் இழப்புடையோர் அல்லர்)”

சத்தியத்தின் வழியில் தன்னை உறுதியாக நிலைப்படுத்திக் கொண்டு சத்தியத்தின் பக்கம் மற்றவர்களை ஒருவர் அழைக்கும்பொழுது அவருக்குப் பலர் எதிரிகளாவது எப்போதுமே நடப்பதாகும். சரியான எதிர்ப்பை அவர் சந்திக்க வேண்டியிருக்கும். இந்தச் சூழ்நிலையில் அவர் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும். தமக்கு நேரும் கடினமானவற்றை அவர் தாங்கிக் கொண்டு நிற்க வேண்டும். மேலும், அந்தச் சூழ்நிலைக்காக அவர் மற்றவர்களைக் குறை கூற முயலக் கூடாது.

சண்டைக்குப் போகாத அஹிம்சை வழிமுறை என்பதன் மற்றொரு சொல் பொறுமை என்பதாகும். இதன் பொருள் என்னவென்றால் சத்தியத்தின் வழியில் செல்லும் ஒருவர் வன்முறைக்கு எதிராக அவரும் வன்முறையில் ஈடுபடக்கூடாது என்பதாகும். அவர் ஒரு தலைப்பட்சமாக அமைதி வழிமுறையைப் பின்பற்ற வேண்டும்.

சத்தியமும் வன்முறையும் இணைந்து செல்ல முடியாதவை ஆகும். நீங்கள் சத்தியத்திற்கு உண்மையாக இருக்க விரும்பினால்

வன்முறையை ஒதுக்கித் தள்ளி விட வேண்டும். எதன் பொருட்டு செய்யப்பட்டாலும் வன்முறை என்பது அருவருக்கத்தக்கதாகும். எல்லாவிதமான வன்முறைகளும் நாசகரமானவையே. வசீகரமாக, அற்புதமாகத் தோன்றக் கூடிய எந்தக் காரணத்தாலும் வன்முறையிலிருந்து ஏற்படும் நாசங்களிலிருந்து காப்பாற்ற முடியாது.

சத்தியத்தின் பெயரால் வன்முறையில் ஈடுபடுவதென்பது சத்தியத்தை மறுதலிப்பதாகும். சத்தியத்தின் பெயரால் வன்முறையில் ஈடுபடுபவர்கள் சத்தியத்தின் வழியில் இல்லை என்பதை அது தெளிவாகக் காட்டுகிறது. சத்தியத்தை நேசிப்பவர் ஒருபோதும் வன்முறையை நேசிப்பவராக இருக்க முடியாது. வன்முறையை நேசிக்கும் ஒருவர் தன்னை சத்தியத்தின் நாயகன் என்று நம்பிக் கொண்டாலும் கூட அவர் நிச்சயமாக சத்தியத்தை நேசிப்பவராக இருக்க முடியாது.

> *குறிப்பிட்ட ஒன்றுக்கான சரியான விலையைக் கொடுக்கா விட்டால் இந்த உலகில் உங்களால் எதனையும் பெற முடியாது.*

## அமைதியின் விலை

ஒவ்வொன்றுக்கும் விலை உண்டு. நீங்கள் குறிப்பிட்ட பொருளுக்கு பணம் செலுத்தத் தயாராக இருந்தால் உங்களால் அதனைப் பெற முடியும். குறிப்பிட்ட ஒன்றுக்கான சரியான விலையைக் கொடுக்கா விட்டால் இந்த உலகில் உங்களால் எதனையும் பெற முடியாது. அமைதிக்கும் இது பொருந்தும். அமைதிக்கும் கூட அதற்கான விலை உண்டு. தனி நபரோ ஒரு குழுவோ விலை கொடுக்கும்போது மட்டுமே அமைதியை அடைய முடியும்.

அமைதிக்கான விலை என்ன? நஷ்டங்களைச் சகித்துக் கொள்வதுதான். இந்த அடிப்படை உண்மை குர்ஆனின் பின்வரும் வசனத்தில் உள்ளது.

“உடைமைகள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றில் இழப்புகளை ஏற்படுத்தியும் ஓரளவு அச்சத்தாலும் பசியாலும் உறுதியாக நாம் உங்களைச் சோதிப்போம். இதில் பொறுமையுடன் இருப்போருக்கு (நபியே!) நற்செய்தி கூறுவீராக!”.

"அவர்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் "நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், அவனிடமே மீள்வோம்" என்று கூறுவார்கள்".

"இத்தகைய மக்கள் மீதுதான் அவர்களுடைய இறைவனிடமிருந்து வாழ்த்துக்களும் அருளும் இறங்குகின்றன. இவர்கள்தாம் நேர்வழியில் உள்ளவர்கள்". (2:155–157)

குர்ஆனின் இந்த வசனங்கள் வாழ்க்கையின் அடிப்படை உண்மையை நமக்குக் கூறுகின்றன. மேலும் இந்த உலகம் படைக்கப்பட்டதன் அடிப்படை விதிகளின்படி மக்கள் பல்வேறுவிதமான நஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. சில நேரங்களில் அவர்கள் மற்றவர்களிடமிருந்து சவால்களை எதிர்கொள்வார்கள். சில நேரங்களில் அவர்கள் பொருளாதார பிரச்சினைகளையோ அதிகார இழப்பையோ எதிர்கொள்ளலாம். சில நேரங்களில் விபத்துகளோ வேறு ஏதாவது ஒன்றிற்கோ அவர்கள் பலியாகலாம். சில நேரங்களில் தங்கள் உரிமை என அவர்கள் கருதும் பலன்கள் கிடைக்கப் பெறாமல் மறுதலிக்கப்படலாம். இப்படியே பலவற்றையும் எதிர்கொள்ளும்படி ஆகலாம்.

ஒவ்வொருவரும் ஏதாவதொரு நேரத்தில் இத்தகைய துன்பகரமான அனுபவங்களைப் பெறுகிறார்கள். இது முழுக்க முழுக்க இயற்கை விதிகளின்படியானதாகும். அத்தகைய சூழ்நிலைகளில் மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களைச் சகித்துக் கொள்ளவில்லை என்றால் அது மிக எளிதாக வன்முறையில் முடிகிறது. ஆனால் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை ஏற்றுச் சகித்துக் கொண்டால், அது அவர்களை அமைதியாக வாழும்படிச் செய்யும்.

நஷ்டத்தைப் பொறுமையாக எதிர்கொண்டு சகித்துக் கொள்வதென்பது தோற்கடிக்கப் பட்டது போன்றதல்ல. அந்த நிலையை மேற்கொள்வதற்குப் பெரும் தைரியமும் துணிச்சலும் தேவை. அது உண்மையை, எதார்த்தத்தை விரும்பி ஏற்றுக் கொள்வதாகும். அது ஒருவர் நஷ்டத்தை அனுபவித்தபோதும், இன்னும் பல வழிகள் உள்ளன, அதன் மூலம் தனது வாழ்க்கையை மீண்டும் கட்டமைத்துக் கொள்ள முடியும் என்பதை அறிந்து இருத்தலாகும்.

நஷ்டத்தை எதிர்கொள்ளும்போது பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் கைக்கொள்வதால் தனது சமநிலை இழந்து விடாமல் தன்னை ஒருவர் காத்துக் கொள்கிறார்.

தற்காலிகமாகத் தோல்வியுற்று வெற்றியை இழந்து விட்ட போதிலும், விவகாரங்களைச் சமநிலை தவறி விடாமல் நோக்கும் திறனை ஒருவர் தக்க வைத்துக் கொள்கிறார். விவகாரங்களை எதார்த்தமாக ஆராயவும் புதிய வாழ்க்கைத் திட்டங்களை வகுத்துக் கொள்ளவும் ஒருவரால் முடியும். ஒருவர் தனது இழப்பைக் கடந்தபின், அவரிடம் இன்னமும் உள்ளவற்றின் அடிப்படையில் வாழ்க்கையின் குறிக்கோளை நோக்கிச் செல்ல முடியும். ஒருவர் நம்பிக்கையற்ற நிலையில் அல்லாமல் விவேகத்துடன் செயல்படுகையில் தனது வாழ்க்கையை மீண்டும் கையிலெடுத்துக் கொண்டு தம் பயணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்கிறார்.

வாழ்க்கையில் ஒவ்வொரு மாலைக்குப் பிறகும் ஒரு புதிய காலை புலர்கிறது. இந்த உலகில் முழுக்க சாத்தியக் கூறுகளும் வாய்ப்புகளும் நிறைந்து இருக்கின்றன. இங்கே நீங்கள் ஒரு வாய்ப்பை இழக்கையில் உங்களால் இன்னொன்றைக் கண்டுபிடிக்க முடியும். நீங்கள் ஒரு காலடியைத் தவற விடுகையில், இன்னொரு கதவை உங்களுக்காகத் திறக்கும்படி இன்னொரு காலடி உங்களைக் கொண்டு செல்லும். இப்படியாக, நீங்கள் ஒரு திட்டத்தில் தோல்வி அடையும்போது உங்கள் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ளும் புதிய திட்டத்தை உருவாக்கிக் கொள்ளும்படியான சாத்தியக் கூறுகள் எப்பொழுதுமே உள்ளன.

இந்த உலகில் உண்மையான ஒன்று என்னவெனில், எப்பொழுதும் நல்ல செய்தியுடன் கெட்ட செய்தியும் வரும் என்பதுதான். ஒவ்வொரு விபத்தும் நமக்கு மௌனமாக ஒரு நல்ல செய்தியைக் கூறுகிறது. அது நாம் மனவருத்தத்தையும் ஏமாற்றத்தையும் கொள்ளக் கூடாது என்றும் மாறாக, தைரியத்தை மனதில் ஏற்றிக் கொண்டு புதிய வாய்ப்புகளை நாம் தேட வேண்டும் என்பதாகும். நாம் உடன்பாடான முறையில் செயல்பட்டோமேயானால், நமது இழப்பு என்பது நிரந்தரமானதல்ல என்ற நல்ல செய்தியை இயற்கை நமக்கு அறிவிக்கும். முன்னைக் காட்டிலும் நல்லதொரு வழியில் வெகு விரைவில் நம்மால் நம் வாழ்க்கையை மறுபடியும் கட்டமைத்துக் கொள்ள முடியும் என்று அது நமக்குக் கூறுகிறது. நமது தோல்வி என்று தோன்றியது நமக்கான வழிகாட்டும் ஆதாரம் என்பதை நாம் வெகு விரைவில் கண்டு கொள்வோம் என்பதை அது நமக்குக் கூறுகிறது.

இழப்பைச் சகித்துக்கொள்ள மறுப்பவர்கள் எதிர்மறையான சிந்தனைக்குப் பலியாகி தங்கள் வாழ்க்கையைப் பெரும் சுமையாக்கிக் கொள்கின்றனர். அப்படிச் செய்வதன் மூலம் அவர்களே

மற்றவர்களுக்குச் சுமையாகி விடுகின்றனர். ஆனால் இழப்பைப் பொறுமை மற்றும் தைரியத்தைக் கொண்டு எதிர் கொண்டவர்கள் பழைய சிதிலங்களிலிருந்து புதிய கட்டடத்தைக் கட்டிக்கொள்ள முடியும். அவர்கள் கும்மிருட்டான இரவுக்குப் பின்னரான புதிய புலர் காலையைத் தேடிக் கண்டடைகின்றனர். அந்த ஒளியில் அவர்களால் தங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தடையின்றி கொண்டு செல்ல முடியும்.

> *இழப்பைப் பொறுமை மற்றும் தைரியத்தைக் கொண்டு எதிர் கொண்டவர்கள் பழைய சிதிலங்களிலிருந்து புதிய கட்டிடத்தை கட்டிக்கொள்ள முடியும்*

ꕥꕥꕥ

## அமைதிக்கான அழைப்பை ஏற்றுக் கொள்ளல்

மக்கா நகரத்து குறைஷியர்களின் அடக்குமுறை முஸ்லிம்களுக்கும் அவர்களுக்குமான போரை நோக்கிக் கொண்டு சென்றது. இந்தச் சூழ்நிலையில் வெளியான குர்ஆனிய வசனங்களில் ஒன்று:

“(நபியே!) அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால் நீரும் அதன்பக்கம் சாய்வீராக! நீர் அல்லாஹ்வையே சார்ந்திருப்பீராக! உறுதியாக அவன் செவியுறுபவன்; முற்றும் அறிந்தவன்.

அவர்கள் உம்மை ஏமாற்ற முனைந்தால் அல்லாஹ் உமக்குப் போதுமானவன். அவன்தான் தனது உதவியின் மூலமாகவும் (ஓரிறை) நம்பிக்கையாளர்களின் மூலமாகவும் உம்மை வலுப்படுத்தினான்”. (8:61–62)

குர்ஆனின் இந்த வசனத்திலிருந்து இஸ்லாமிய நெறிப்படி அமைதி என்பது எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு விரும்பத்தக்கது. அது மிகுந்த இக்கட்டைக் கொண்டிருந்தாலும் அமைதியை நிறுவுவது விரும்பத்தக்கது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். போர் எனும் நிலையில் எதிர்க்குழுவினர் சமாதானத்திற்கான வாய்ப்பைக் கோரினால் எந்தவிதத் தாமதமுமின்றி அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எதிர்க்குழுவினரின் சமாதானத்திற்கான அழைப்பில் ஏதேனும் உள்நோக்கம் மறைந்திருக்கும் என்ற சந்தேகம் இருந்தாலும் “அமைதியை விரும்புவோருடனே இறைவன் இருப்பான்; ஏமாற்றுபவர்களோடு அல்ல என்ற இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்குழுவின் சமாதானத்திற்கான அந்த அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.”

இதிலிருந்து நாம் மேலும் கற்றுக் கொள்வது என்னவென்றால் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பாடுபடுபவர்கள் மிகுந்த தைரியத்தைக் கொண்டவர்கள் என்பதுதான். இந்த உலகில் மக்கள் மற்றும் குழுக்களுக்கு இடையே எப்போதும் பிரச்சினைகள் இருந்து கொண்டேதான் இருக்கும். உரிமைகள் நசுக்கப்படுகின்றன, அநீதி இழைக்கப்படுகிறது என்பது போன்ற பிரச்சினைகள் எப்போதும் இருந்துக்கொண்டேதான் இருக்கும். இத்தகைய நிலையில், அமைதியை நிலைநாட்ட விரும்புவோர் என்ன ஆனாலும் அமைதியை நிலைநாட்ட எழுவார்கள். அவர்கள் எதன் பொருட்டும் வன்முறையில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அத்தகைய தைரியமுள்ளவர்களால்தான் இவ்வுலகில் அமைதியை நிலைநாட்ட முடியும். தைரியமற்றவர்கள் நிலையாகத் தொடர்ந்து சச்சரவுகளில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார்கள். அமைதியை நிலைநாட்டுவது என்பதில் அவர்களால் ஆவது ஒன்றுமில்லை.

*அமைதியை விரும்புவோருடனே இறைவன் என்றும் இருப்பான்.*

## மாபெரும் கொடை

வாழ்க்கையின் ஓர் உண்மையைக் குர்ஆன் பின்வரும் வசனம் மூலம் தெரிவிக்கிறது.

“(நபியே!) அவர்களைச் சோதிக்கும் பொருட்டு அவர்களில் சிலருக்கு நாம் வழங்கியிருக்கும் உலகியல் வசதிகளை ஏறெடுத்தும் பார்க்காதீர். இறைவன் (உமக்கு) வழங்கியிருப்பதுதான் மேலானது; என்றும் நிலையானது”. (20:131)

உங்கள் வாழ்க்கையை நீங்கள் இரண்டு வழிகளில் வாழ முடியும். ஒரு வழி இவ்வுலகை உங்கள் குறிக்கோளாகக் கொண்டு உலகியல் சாதனங்களையும் அதிகாரத்தையும் பெறுவது. இவற்றைப் பொறுத்தவரையில் மக்களுக்கிடையே எப்பொழுதும் வேறுபாடுகள் உண்டு. இந்த உலகியல் சாதனங்களுக்காக மக்கள் தொடர்ந்து சண்டையில் நிலையாக ஈடுபட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதனால் பொருளியல் மனம் படைத்த மக்கள் தங்களது உரிமைகள் மற்றவர்களால் நசுக்கப்படுவதாகவும் பிடுங்கிக் கொள்ளப்படுவதாகவும் எப்போதும் எண்ணுகிறார்கள். இந்த உணர்ச்சிகள் பொறாமை, பழிவாங்குதல் மற்றும் வன்முறை என்பனவற்றின் மூலம் தொடர்ந்து வெளிக்காட்டப்படுகின்றன.

உங்கள் வாழ்க்கையை நடத்தும் இன்னொரு விதி உங்கள் சாதனைகள் மீது கவனம் கொள்வதாகும். இந்த வழியில் வாழும் ஒருவர் தமக்குத்தாமே 'போதும்' என்ற வகையில் அடக்கமாக வாழ்வார். தனக்கு விருப்பமான எதையும் தன்னுள்ளேயே அவர் தேடுவார். மேலும் அது மற்றவர்கள் மீது வருத்தம் கொள்வதிலிருந்தும் வெறுப்பு கொள்வதிலிருந்தும், அவர்கள் மீது வன்முறையில் ஈடுபடுவதிலிருந்தும் அவரைக் காக்கிறது. அவர் அவரது எஜமானனான இறைவனின் ஊட்டத்தைப் பெறுகிறார். அதாவது சத்தியத்தைக் கண்டறிந்து விட்டதான நிலையான நம்பிக்கையை அடைகிறார்; மேலும் அவர் மீது இறைவன் சொறிந்துள்ளவை தங்கமும் வெள்ளியும் கொண்ட பொக்கிஷத்தை விட மிகவும் மதிப்பு வாய்ந்தது என்பதைக் கண்டறிகிறார். முழு பிரபஞ்சமும் அவருக்கு அறிவுப்பூர்வமான ஆன்மீகப்பூர்வமான விருந்து போல ஆகும்படியான விழிப்படைந்த மனதுடன் அவர் வாழ்கிறார்.

இத்தகைய மனிதர் இவ்வகையில் இறைவனின் ஊட்டத்தைப் பெறுகையில் செல்வ வளமும் அதிகாரமும் மிக அற்பமானவை என்னும் நிலைக்கு உயர்கிறார். அவரது மனநிலை அவரை அமைதியின் நேசராக்கி விடுகிறது. அவர் வெறுப்பும் வன்முறையும் பொருளற்றவை என்றும் எவர் மீதும் வெறுப்பையோ வன்முறையையோ காட்ட அவருக்கு நேரமே இல்லை என்பதாகவும் கொள்கிறார். மதிப்பிடமுடியாத பெரும் பொக்கிஷத்தைப் பெற்ற ஒருவர், அற்பமானவற்றின் பின்னால் ஏன் ஓடப் போகிறார்?

> *எந்தச் சார்புமற்ற நவீன அரசு முறை தனது அனைத்து குடிமக்களுக்கும் தங்களுக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றவும், போதிக்கவும் பரப்பவும் உத்தரவாதம் அளித்துள்ளது.*

ஐஐஐ

## அமைதி, பாதுகாப்பிற்கான வழி

இறைத்தூதர் ஷுஐபிடம் அவரது மக்கள் கூறியதைக் குர்ஆனின் பின்வரும் வசனம் இப்படிக் கூறுகிறது:

"அவர்கள், 'ஷுஐபே! நீர் கூறும் பெரும்பாலானவை எங்களுக்குப் புரியவில்லை. உறுதியாக எங்களுக்கிடையே உம்மை வலுவற்றவராகவே காண்கிறோம். உமது குலத்தார் மட்டும் இல்லையெனில் உம்மைக் கல்லால் அடித்தே கொன்றிருப்போம். நீர் எங்கள் மதிப்பிற்குரியவரும் அல்லர்' என்றனர்". (11: 91)

மேற்கண்ட இந்த வசனம் இறைத்தூதர் ஷுஐபின் கூட்டத்தார், உண்மையான இறை நம்பிக்கையாளர்களாக இல்லை என்ற போதும் பழங்குடி இனப்பழக்க அடிப்படையில் அவருக்குப் பாதுகாப்பளித்ததைப் பற்றிக் கூறுகிறது. இதுவே ஒவ்வொரு இறைத்தூதரும் அவர்தம் கூட்டத்தாரின் பாதுகாப்பில் இறைவனால் அனுப்பப்பட்டனர் என்று நபிமொழியாக இமாம் அஹ்மதின் முஸ்னதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நவீன நிர்வாக முறை வருவதற்கு முன்பு பண்டைய காலங்களில் மக்கள் அவர்கள் சார்ந்த கோத்திரத்து அங்கத்தினர்களால் பாதுகாக்கப்பட்டனர். பழங்குடி பழக்கவழக்கம் மற்றும் மரபுப்படி மற்ற பழங்குடியினரிடமிருந்து தம் சொந்தப் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களைப் பாதுகாப்பது கடமையாகும்.

அந்தக் காலங்களில் இறைத்தூதர்களுக்கும் கூட இது பாதுகாப்பு அரணாக இருந்தது. பனு ஹாஷிம் கோத்திரத் தலைவரான அபூதாலிபிடமிருந்து அத்தகைய பாதுகாப்பு இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது. அபூதாலிப் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை என்றாலும்கூட, பழங்குடியின மரபுப்படி இறைத்தூதரை அவர்தம் எதிர்ப்பாளர்களிடமிருந்து தொடர்ந்து பாதுகாத்து வந்தார்.

இன்றைய காலத்தில் பழங்குடியின அமைப்பு மறைந்து விட்டது. ஆனால் முன்பிருந்த இந்தப் பாதுகாப்பு, நவீன காலத்தில் எந்தச் சார்புமற்று அரசு முறையில் வழங்கப்படுகிறது. இறை நம்பிக்கை கொண்டவர்களுக்கும் இறை அழைப்புப் பணியில் ஈடுபடுவோருக்கும் உட்பட இந்த வகையான பாதுகாப்பு அளிக்கப்படுகிறது எந்தச் சார்புமற்ற நவீன அரசு முறை தனது அனைத்து குடிமக்களுக்கும் தங்களுக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றவும், போதிக்கவும் பரப்பவும் உத்தரவாதம் அளித்துள்ளது. வன்முறையில் ஈடுபடவில்லை என்றால் மக்கள் அவற்றைச் செய்வதை எவரும் தடை செய்வதில்லை.

இறைத்தூதர்களைப் பாதுகாத்த கேடயம் முற்காலத்தில் பழங்குடியின அமைப்பு முறையில் இருந்தது. அது பழங்குடியின பாதுகாப்பு முறையாக இருந்தது. அது இஸ்லாமிய முறையிலானதாக இல்லை. இருந்தபோதும் இறைத்தூதர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். அதேபோன்று இன்றைய உலகில், முஸ்லிம்களிடம் இருக்கும் பாதுகாப்பு என்பது மதச்சார்பற்ற ஒன்றே; அது இஸ்லாமிய முறையிலானது அல்ல. இறைத்தூதர்களின் செயல்முறை அல்லது சுன்னத்தின்படி இந்தப் பாதுகாப்பு முறையை ஏற்றுக் கொண்டு அமைதியான செயல்பாடுகளைச் செய்தல் வேண்டும். இருந்தாலும், ஒட்டுமொத்த உலகின் முஸ்லிம் தலைவர்கள் மதச்சார்பற்ற

கொள்கை என்பது மதத்திற்குப் புறம்பானதென்று முத்திரை குத்தி, அதற்கு எதிரான சொற்போரையும், ஆயுதப் போரையும் ஏவி விட்டுள்ளனர். இப்படி அவர்கள் தேவையில்லாமல் மதச்சார்பற்ற தன்மைக்கு எதிரிகளாகி விட்டனர். அதன்மூலம் மதச்சார்பற்ற முறை அளிக்கும் மதிப்புமிக்கப் பாதுகாப்பை அவர்கள் பயன்படுத்தாமல் விட்டு விட்டனர்.

> *மோதலையும் போரையும் தவிர்த்து அமைதியான சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் சாத்தியத்தை அளிக்கக்கூடிய ஒரு புரட்சியில் அவர் அதனைக் காட்டித் தந்துள்ளார்.*

## மனிதத்துவத்திற்கான கருணை

இறைத்தூதர் முஹம்மதை விளித்துக் குர்ஆன் கூறுகிறது:

“(நபியே!) நாம் உம்மை உலகத்தாருக்கு ஓர் அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்”. (21:107)

இறைத்தூதரின் வருகை முழு மனித குலத்திற்குமான இறைவனுடைய கருணையின் வெளிப்பாடாகும். ‘தாருஸ் ஸலாம்’ என்று குர்ஆன் குறிப்பிடும் இடத்தில் மனிதர்கள் வாழும்படியாக அமைந்த கொள்கைகளை அவர் மூலமாக இறைவன் நமக்குத் தெரிவித்துள்ளான். ‘அமைதியின் வீடு’ என பொருள்படக்கூடிய இந்த ‘தாருஸ் ஸலாம்’ அதில் வசிப்பவர்களுக்கான அமைதியையும் பாதுகாப்பையும் கொண்டதாகும். இறைத்தூதரின் மூலமாக அமைதியான சமூகத்தை அமைக்க முடியும் என்பதற்கான போதனைகளை இறைவன் நமக்கு அறிவித்துள்ளான். முழுமையான அமைதிக் கொள்கையை இறைத்தூதர் மனித குலத்திற்கு அளித்துள்ளார். அவர் வெறுப்பு மற்றும் வன்முறையிலிருந்து தவிர்ந்து விலகி, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியும் என்பதற்கான சூத்திரத்தை நமக்கு அளித்துள்ளார். மோதலையும் போரையும் தவிர்த்து அமைதியான சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் சாத்தியத்தை அளிக்கக்கூடிய ஒரு புரட்சியில் அவர் அதனைக் காட்டித் தந்துள்ளார்.

மிகவும் நிர்ப்பந்தமான குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் இறைத்தூதர் போரிட வேண்டி வந்தது. ஆனால் அவை வெறும் கைகலப்புகள்தான், போர்களல்ல என்று கூறும் அளவுக்கு மிகமிகச் சிறியவையே. ஆகவே இறைத்தூதர் புரிந்த மாபெரும் புரட்சியை நிச்சயமாக இரத்தம் சிந்தாப் புரட்சி என்று கூறலாம்.

முழுமையான, விளக்கமான வாழ்க்கைமுறை என்ற தகுதியை இறைத்தூதர் 'அமைதி' என்பதற்கு அளித்தார். வன்முறை அழிவில் கொண்டு போய் விடுமென்றும் அமைதியோ ஆக்கப்பூர்வமான செயல்பாட்டில் விடுமென்றும் அவர் நமக்கு கற்றுக் கொடுத்தார். பொறுமையாக இருப்பது என்பது மிக உயர்ந்த வணக்கம் என்று அவர் கூறினார். அதன் பொருள் அமைதி வழியை முழுக்க முழுக்க நிலைநாட்டிக் கொள்வது என்பதாகும். இயற்கையாய் அமைந்துள்ள அமைதியைச் சீரழிக்கும் விரோதம் கொண்டு சண்டையிடுதலை அவர் பெருங்குற்றம் என்று கூறினார். ஒரு தனி நபரைக் கொல்வது என்பது ஒட்டுமொத்த மனித குலத்தையுமே கொல்வது போன்றது என்ற குர்ஆனின் போதனைப்படி, அவர் அமைதி என்பதற்கு முழு முக்கியத்துவத்தை அளித்தார்.

ஒருவருக்கொருவர் முகமன்கூற 'அஸ்ஸலாமு அலைக்கும்' அதாவது 'உங்கள் மீது சாந்தியும்!' சமாதானமும் நிலவுவதாக என்று கூறுவதை இறைத்தூதர் நமக்குக் கற்பித்தார். இதன் பொருள் நமக்குள்ளான உறவுமுறை அமைதியையும் பாதுகாப்பையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுதான். மறுமை நாளுக்கான வெற்றியைப் பெறுவதே மனிதச் செயல்பாடு; இந்த உலகில் பாடுபடுவதன் உண்மையான குறிக்கோள் என்றும் அவர் நமக்குப் போதித்தார். இப்படியாக அனைத்து வகையான மோதல்கள் மற்றும் வன்முறையின் அடிப்படையான உலகியல் முன்னேற்றம் என்பது நமது வாழ்க்கை இலக்கு என்ற தவறான நம்பிக்கையை அவர் வேரோடு பிடுங்கி எறிந்தார். மனித குலத்திற்கு அழகான ஒரு சூத்திரத்தை அவர் அளித்துள்ளார். அது, "மற்றவர்களுக்குப் பயன்படும்படியானவராக ஒருவர் ஆக வேண்டும்" என்பதுதான். உங்களால் மற்றவர்கள் பயன்படும்படி ஆகமுடியவில்லை என்றால் மற்றவர்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காதவர்களாக நீங்கள் ஆக வேண்டும்.

எவரையும் நமது எதிரி என்று கருதக் கூடாது என்று அவர் நமக்கு போதித்தார். நம்மை எதிர்ப்பவர்களிடம் நாம் நல்ல முறையில் நடந்து கொண்டால், நாம் எதிரி என்று நினைக்கும் ஒவ்வொருவரின் ஆழ்மனதில் நல்லதொரு நண்பராகும் கூறுகள் உள்ளதை நம்மால் உணர முடியும் என்பதையும் கூட நாம் அவரிடமிருந்து கற்றுள்ளோம்.

*முழுமையான விளக்கமான வாழ்க்கைமுறை என்ற தகுதியை இறைத்தூதர் அமைதி என்பதற்கு அளித்தார்.*

## ஜிஹாத்: ஓர் அமைதி வழிச்செயல்பாடு

*ஒவ்வொரு வார்த்தையும் மொழிவழியிலான நேரடி அர்த்தமும், மரபு வழியிலான அர்த்தமும் கொண்டதாக இருக்கும். இந்த மரபு வழியிலான பொருள் என்பது மரபாக எப்படி அந்த வார்த்தை புரிந்து கொள்ளப்படுகிறது என்பதாகும். இது 'ஜிஹாத்' என்ற சொல்லுக்கும் கூடப் பொருந்தும். 'ஜிஹாத்' என்ற சொல் 'ஜுஹுத்' அல்லது 'ஜஹ்த்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் மொழிவழியிலான நேரடிப்பொருள் 'கடும் முயற்சி' என்பதாகும். இந்த 'ஜிஹாத்' என்ற சொல் பல்வேறுவிதமான முயற்சிகள், உழைப்பு அல்லது போராட்டம் என்பதற்கு மரபாகப் பயன்படுத்தப்படுகிறது. அவற்றில் ஒன்றுதான் போர் என்பதாகும்.*

*என்றாலும், ஒரு குறிப்பிட்ட – விதிவிலக்கான போருக்கே அச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அது மத அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வர இறைவனுக்காகச் செய்யப்படுவதாகும். அதிகாரத்தையும் செல்வ வளத்தையும் பெற்றுக் கொள்வதற்காகச் செய்யப்படுவது 'ஜிஹாத்' என்று அழைக்கப்படுவதில்லை.*

*குர்ஆனின் வசனம் ஒன்று:*

*"எனவே நீர் (ஓரிறை)மறுப்பாளர்களுக்குக் கீழ்ப்படியாதீர். (குர்ஆனாகிய) இதன் மூலம் அவர்களிடம் (இறைச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதற்காகக்) கடும்முயற்சி மேற்கொள்வீராக!" (25:52)*

*குர்ஆன் என்பது வாளோ துப்பாக்கியோ அல்ல. அது கொள்கைக்கான ஒரு நூலாகும். அப்படி என்றால், குர்ஆனைக் கொண்டு ஜிஹாத் செய்யுங்கள் என்பதன் பொருள் இஸ்லாத்தின் அமைதிச் செய்தியை மக்களுக்குக் கொண்டு செல்லக் கொள்கை ரீதியிலான போராட்டம் புரிவது என்பதாகும். குர்ஆனின் இந்த வசனத்தின் ஒளியில் அஹிம்சை ரீதியிலான செயல்பாடு அல்லது அமைதி வழிச் செயல்பாடு என்பதன் இன்னொரு பெயரே 'ஜிஹாத்' என்பதுதான் உண்மை.*

*இதனைப் பொறுத்தமட்டில் குர்ஆன் இரண்டு சொற்களைப் பயன்படுத்துகிறது. ஒன்று "ஜிஹாத்", மற்றொன்று "கிதால்". அமைதி வழி உழைப்பு அல்லது அமைதி வழிப் போராட்டம் என்று வரும்போது 'ஜிஹாத்' என்ற சொல்லைக் குர்ஆன் பயன்படுத்துகிறது. உதாரணமாக, முன்னர் குறிப்பிட்டுள்ள குர்ஆனின் வசனம் (25:52) மற்றவர்களை மதத்திற்கு குர்ஆனின் மூலம் அழைக்கும் அமைதி*

வழி ஜிஹாதைக் குறிக்கிறது. அதே நேரத்தில் ஆயுதம் தாங்கிய உடல் ரீதியான யுத்தம் என்பதற்குக் 'கிதால்' என்ற சொல்லைக் குர்ஆன் பயன்படுத்துகிறது. உதாரணத்திற்குக் குர்ஆனின் 03:121–வது வசனத்தைக் கூறலாம்.

ஆனால் பிற்காலத்தில் இறைத்தூதர் மறைந்த பிறகு, இந்த 'ஜிஹாத்' என்ற சொல்லைக் 'கிதால்' அல்லது போர் என்பது போன்றே பயன்படுத்துதல் ஆரம்பமானது.

இருந்தபோதும், 'ஜிஹாத்' என்ற சொல் பயன்படுத்துவது சரி என்று வைத்துக் கொண்டாலும் கூட, அந்தச் சொல்லின் பொருள் தாண்டி பெரிதாகப் பயன்படுத்தப்படுவது தெளிவாகத் தெரிகிறது. சொல்லின் முக்கியமான அல்லது சரியான பொருள் என்றால், 'ஜிஹாத்' என்பது அமைதியான செயல்பாடுதான், வன்முறையானதல்ல. அது மக்களை ஆன்மீக ரீதியாகவும் அறிவுப்பூர்வமாகவும் ஞானமுண்டாக்கப் பயன்டுத்தப்பட்டதே ஒழிய, அவர்களைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்படவில்லை.

'ஜிஹாத்' என்பது சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டால் அது முழுக்க முழுக்க அமைதி வழிச் செயல்பாடே. தனிமனிதர் என்ற அளவில் எடுத்துக் கொண்டால் 'ஜிஹாத்' செய்வது என்பது, அவர் எதிர்கொள்ளும் கடினமான போராட்டம் மற்றும் இழிவான மன இச்சைகள் ஆகியவற்றால் உந்தப்பட்டு இறைவனின் பாதையிலிருந்து விலகுவதை மறுத்து அதனை எதிர்த்துப் போராடுவதாகும். அது ஒருவர் தம் வாழ்க்கைப் பாதையில் உள்ள சவால்களை எதிர்கொண்டு சத்தியத்தின் வழியில் உறுதியாக நிற்பதாகும். எல்லாவற்றையும் ஒன்று கூட்டிக் கூறினால் 'ஜிஹாத்' என்பதை அமைதி வழிப் போராட்டம் என்று அழைக்கலாம்.

இந்தப் போராட்டத்தின் மிக அடிப்படையான அம்சம், மக்களுக்கிடையே அறிவுப்பூர்வமான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை நேர்மறையாக, ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வைத்து அவர்களது குண நலன்களைத் தூய்மை செய்துகொள்ளச் செய்வதாகும். இந்த வகையில் 'ஜிஹாத்' என்பதைப் புரிந்து கொண்டால், மக்கள் தாங்கள் மற்றவர்களுக்குப் பலனளிக்கும் வழியைத் தேடும்படித் தூண்டி, மற்றவர்களின் நலனில் அக்கறை கொள்ளச் செய்வதாகும். 'ஜிஹாத்' என்பதில் பயன்படுத்தப்படும் ஆயுதம் அன்பே தவிர, வெறுப்போ வன்முறையோ அல்ல.

*பொறுமையாக இருப்பது என்பது மிக உயர்ந்த வணக்கம் என்று அவர் கூறினார். அதன் பொருள் அமைதி வழியை முழுக்க முழுக்க நிலைநாட்டிக் கொள்வதாகும்.*

ꙮꙮꙮ

## மௌனத்தில் ஈடேற்றம்

மௌனத்தின் முக்கியத்துவம் குறித்து இறைத்தூதரின் மொழிகள் பல்வேறு வகைகளில் அறிவிக்கப்பட்டுள்ளன. திர்மிதி, தாரிமி மற்றும் அஹ்மது ஆகிய நபிமொழித் தொகுப்புகளில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

இறைத்தூதர் கூறினார்:

“மௌனத்தை மேற்கொள்ளும் மனிதர் ஈடேற்றம் பெறுவார்”

மக்கள் பேசுவதை நிறுத்தி, முழுக்கவும் மௌனமாகி விட வேண்டுமென்பது இதன் பொருளல்ல. ஒரு மனிதர் மௌனமாக இருந்து சிந்திக்க வேண்டும், அதன் பின்னர் மட்டுமே பேச வேண்டும் என்பதுதான் இதன் பொருள். குறைவாகப் பேசவும் நிறைய சிந்திக்கவும் செய்து, நாம் என்ன பேசப் போகிறோம் என்பதை முறையாக யோசித்த பிறகே பேச வேண்டும் என்ற வழக்கத்தை நாம் பயிற்சி செய்து வளர்த்துக்கொள்ள வேண்டும். நமது சாதாரணமான தினசரி உரையாடல்களில் மனப்பூர்வமாகப் பயிற்சி செய்யும் பழக்கத்தை உருவாக்கி வளர்த்துக் கொள்வதன் மூலம் இது சாத்தியமாகும். இந்தப் பழக்கத்தை நமது தினசரி உரையாடல்களில் வளர்த்துக் கொள்ள முடிந்தால், அசாதாரணமான அல்லது சவாலான சூழல்களிலும் நம்மால் அது போன்றே செயல்பட முடியும்.

சாதாரணமாகப் பெரும்பான்மையான மக்கள் ஏதாவது ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது அந்தக் கணத்தில் எந்தச் சிந்தனையும் இன்றி தங்கள் மனதில் தோன்றுவதைப் பட்டென்று பேசி விடுகிறார்கள். எதிர்வினையாற்றுவதற்கான சரியான வழி இதுவல்ல. சரியாகக் கூற வேண்டுமென்றால், ஒருவர் முதலில் சிந்தித்து அதன் பின்னரே பேசத் தொடங்க வேண்டும். இப்படி நீங்கள் எதிர்வினையாற்றினீர்கள் என்றால், நீங்கள் ஏதாவது கூறியதைக் குறித்து வருத்தப்படுவதிலிருந்து உங்களைக் காத்துக்கொள்ள முடியும். ஏனென்றால் ஏதாவதொன்றை நீங்கள் கூறி விட்டீர்கள் என்றால் அதனை ஒருபோதும் உங்களால் திருப்பி எடுத்துக்கொள்ள முடியாது.

ஒருவர் தனக்குச் சாதகமற்ற சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது. தீப்பிடித்தது போன்று உணர்ச்சி வசப்பட்டு விரும்பத்தகாத முறையில் பேசுவது பொதுவாக நிகழக் கூடியதாக உள்ளது. இதிலிருந்து ஒருவர் தன்னைக் காத்துக் கொள்வதற்குத் தனது தினசரி வாழ்க்கையில் சிந்தித்துப் பின் பேசும் வழக்கத்தைப் பயிற்சியாகச் செய்து வளர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் இதனைச் செய்து வளர்த்துக் கொண்டால் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போதும், தினசரி செய்து வந்ததைப் போலவே சிந்தித்துப் பின்னர் பேசுவீர்கள். தினசரி வாழ்வின் உரையாடல்களை உங்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு பேசினால் அதே போன்று அவசர நிலைகளில் கூட மன ஒழுக்கத்தில் கட்டுப்பாடாக பேசுவீர்கள்.

இந்த உலகின் அதிகமான குழப்பங்களும் சச்சரவுகளும் வார்த்தைகளாலேயே நிகழ்கின்றன. சில வார்த்தைகள் வெறுப்பையும் வன்முறையையும் தூண்டுகின்றன. மற்ற வார்த்தைகள் அமைதி மற்றும் மனிதத்துவம் நிறைந்த சூழ்நிலையை ஊட்டி வளர்க்கும். மக்கள் சிந்தித்துப் பின்னர் பேசினால், மற்றும் தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் இந்த ஒரு செயலைச் செய்தால் பெரும்பாலான சச்சரவுகளும் போராட்டங்களும் பிறக்கும் முன்னரே இறந்து விடும். ஒருவர் தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு பேச முடிவதென்பது மாபெரும் விஷயமாகும்.

தங்களை ஆய்வு செய்து, தொடர்ந்து சுய பரிசோதனை செய்து தங்கள் வார்த்தைகளையும், செயல்களையும் ஆராய்பவர்கள் மட்டுமே இந்த உன்னதமான பண்பைக் கொண்டிருப்பார்கள். ஒன்றை நீங்கள் செவியால் கேட்கும்பொழுது உடனடியாக பதில் சொல்லவோ எதிர்வினையாற்றவோ கூடாது. மாறாக, சிறிது நேரம் மௌனம் காத்து, நீங்கள் என்ன கேட்டீர்கள் என்பதை யோசித்து, உங்கள் சரியான எதிர்வினை என்ன என்பதைச் சிந்தியுங்கள். நீங்கள் உங்கள் காதுகளால் கேட்பதற்குச் சரியான முறையில் பதிலளிப்பதனை இது உத்தரவாதப்படுத்தும். கற்களுக்குக் கற்களை எறிந்து எதிர்வினையாற்றுவதற்கு மாறாக பூக்கள் எறிவதை நீங்கள் கண்டடைவீர்கள். அப்படியாக நீங்கள் வெற்றி பெற்றவர்களாவீர்கள்.

*வன்முறை, அழிவில் கொண்டு போய் விடுமென்றும்*
*அமைதி ஆக்கப்பூர்வமான செயல்பாட்டில் விடுமென்றும்*
*அவர் நமக்கு கற்றுக் கொடுத்தார்.*

# எந்த விலை கொடுத்தேனும் அமைதியை அடைவது

இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அமைதியின் மாபெரும் நேசராக இருந்தார். அவரது எதிர்ப்பாளர்கள் அவரைப் போரில் ஈடுபடும்படி செய்யத் தொடர்ந்து முயன்று கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் தவிர்த்து எதிர்ப்பாளர்களுடன் போரிடுவதிலிருந்து விலகியே இருந்தார். ஆனாலும் அவரது எதிர்ப்பாளர்களின் ஒருதலைப்பட்சமான அடக்கி ஒடுக்குதலை எதிர்கொள்ள நேர்ந்த போது, அவர் தற்காத்துக் கொள்ளும் விதமாக வேறு எந்த வழியும் இல்லாததால் போரிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவை மிகவும் தற்காலிகமானவையாகவே இருந்தன. அத்தகைய தற்காப்புப் போர்களில் ஒன்றுதான் பத்ருப் போர்.

இரண்டு படைகளும் ஒன்றை ஒன்று சந்திக்க நேர்ந்த கணத்தில் வானவர் ஒருவர் இறைத்தூதரிடம் வந்தார். வந்த வானவர் இறைத்தூதரிடம் இறைவன் தன் மூலமாக அமைதிச் செய்தி (ஸலாம்) ஒன்றை அனுப்பியுள்ளதாகக் கூறினார். இதனைக் கேட்டவுடன் “இறைவனே அமைதி; இறைவனிடமிருந்தே அமைதி வருகிறது; அது அவனிடமே திரும்பும்” என்று இறைத்தூதர் வானவரிடம் கூறினார்.

இந்தச் சம்பவத்திலிருந்து போர் நெருக்கடி சமயத்தில் கூட இறைத்தூதர் அமைதியை நேசிப்பவராக இருந்தார் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அத்தகைய நெருக்கடியான நேரத்தில் கூட இறைத்தூதர் தனது மனதை வெறுப்பும் வன்முறை எண்ணமும் ஆக்கிரமித்து விட அனுமதிக்கவில்லை. மாறாக அத்தகையதொரு சூழ்நிலையிலும் கூட அவர் அமைதி மற்றும் பாதுகாப்பு என்ற வகையிலேதான் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்திலும் கூட இறைவனின் உதவியால் அமைதியும் பாதுக்காப்பும் நிறைந்த சூழலை உலகில் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை அவர் இதயத்தில் நிறைந்திருந்தது. உண்மையான ஒரு மனிதர் போர்ச் சூழலில் கூட அமைதியைக் குறித்தே சிந்திப்பார். மேலும் போர் நிகழ்ந்து கொண்டிருந்த போதும் கூட அவருடைய இதயத்தில் அமைதி மற்றும் பாதுகாப்புக்கான நம்பிக்கை நிலவும்.

இது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. மாறாக இது உடன்பாடாகச் சிந்திப்பதன் மிக உயர்ந்த முன்மாதிரியாகும். போர் என்பது அனைத்து விதமான எதிர்மறை விஷயங்களை

விடவும் மிக மிக எதிர்மறையான விஷயமாகும். போரிடும் சூழலில் போர் முனையில் இறைத்தூதர் நிற்கிறார். ஆனால் அவர் வாயிலிருந்த வார்த்தைகள் வன்முறை மற்றும் இரத்த வெள்ளம் என்பதாக இருக்கவில்லை. மாறாக அவை அமைதி மற்றும் பாதுகாப்பு என்பதாகவே இருந்தது. சந்தேகமில்லாமல் மிக உயர்ந்த மேன்மையான குணத்தையே இது காட்டுகிறது. மேன்மை மிக்க உயர்ந்த மனிதர் எனப்படுபவர் வன்முறையை எதிர் கொள்ளக்கூடிய சமயத்திலும் கூட அமைதி என்பதையே சிந்திப்பார். மேலும் போர் செய்து கொண்டிருக்கும் நிலையிலும் கூட சமாதானத்திற்கான திட்டங்களைத் தயார் செய்வார்.

> தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளும் இந்த ஒரு செயலைச் செய்தால் பெரும்பாலான சச்சரவுகளும் போராட்டங்களும் பிறக்கும் முன்னரே இறந்து விடும்.

## இறைவனின் பெயரே அமைதி என்பதுதான்

இறைவனின் திருநாமங்களாகப் பல்வேறு பெயர்களைக் குர்ஆன் குறிப்பிடுகிறது. அவற்றுள் ஒன்றுதான் ‘அஸ்ஸலாம்’ என்பதாகும். ‘அஸ்ஸலாம்’ என்ற அரபுச் சொல்லின் பொருள் ‘அமைதியின் மூலாதாரம்’ என்பதாகும். இதன் பொருள் என்னவென்றால் இறைவன் அமைதியின் பொருளாக, அர்த்தமாக உள்ளான் என்பதாகும். இறைவன் தனது பெயர்களில் ஒன்றாக ‘அஸ்ஸலாம்’ என்பதை வைத்துக் கொள்ளும் அளவிற்கு அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மிகவும் நேசிக்கிறான்.

இறைவனின் இருத்தலில் இருந்தே அனைத்து மக்களும் பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் இருக்கிறார்கள் என்றும் அவனிடமிருந்தே அமைதியையும் வன்முறையற்ற சாத்வீகத்தையும் அனுபவிக்கிறார்கள் என்றும் பிரபல அறிஞர் அல்கட்டாபி எழுதுகிறார். மனிதர்களுடனான இறைவனின் செயல்பாடுகள் அமைதி மற்றும் பாதுகாப்பு என்பதன் அடிப்படையில் இருக்கும்பொழுது மனிதர்களும் ஒருவருக்கொருவர் அவ்வகையிலேயே செயல்பட வேண்டும். அதாவது நாம் ஒருவருடன் ஒருவர் அமைதி மற்றும் பாதுகாப்பு என்பதன்படியே உறவாட வேண்டும், வன்முறை மற்றும் தீவிரத்தன்மை கொண்டல்ல.

*மேன்மை மிக்க உயர்ந்த மனிதர் எனப்படுபவர் வன்முறையை எதிர் கொள்ளக்கூடிய சமயத்திலும் கூட அமைதி என்பதையே சிந்திப்பார். மேலும் போர் செய்து கொண்டிருக்கும் நிலையிலும் கூட சமாதானத்திற்கான திட்டங்களைத் தயார் செய்வார்.*

ஜஞஜஞஜஞ

## யார் பலசாலி?

“வலிமையானவர் என்பவர் உடல் பலத்தால் அடுத்தவரை வெற்றி கொள்பவரல்லர். மாறாகக் கோபம் எழும் நேரத்தில் தன்னை அடக்கிக் கொள்பவரே” என்று இறைத்தூதரின் மொழி ஒன்று கூறுகிறது. (புகாரி)

கோப வயப்படும் போது அதனை ஒருவர் அடக்கிக் கொள்வதென்பது சுயக்கட்டுப்பாட்டின் அடையாளமாகும். மேலும் சுயக்கட்டுப்பாடு சந்தேகத்திற்கிடமில்லாமல் மாபெரும் சக்தியாகும். ஒருவர் கோபமாக இருக்கும்பொழுது சுயக்கட்டுப்பாடு என்பது அவரைத் தவறான செயல்களைச் செய்வதிலிருந்து காக்கிறது. சுயக்கட்டுப்பாடு இல்லாத ஒருவர் கோபப்படும் பொழுது கட்டுப்படுத்த இயலாமல் எளிதாக வன்முறையில் இறங்கும் அளவுக்கு உணர்ச்சி வெடித்துப் பெருகும் நிலைக்கு ஆளாகிறார். ஒருவர் தனது கோபத்தைக் கட்டுக்குள் வைத்துக் கொள்வது என்பது அமைதியை விரும்பும் வழியாகும். அதே சமயத்தில் ஒருவர் கோபப்படும் பொழுது கட்டுப்பாட்டை இழப்பது வன்முறையைக் கொண்டாடும் வழியாக இருக்கிறது.

இரு நபர்கள் சண்டையிட்டுக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அவர்களுள் ஒருவர் மற்றவரை பிடித்துத் தரையில் தள்ளி விடுகிறார். தள்ளி விட்டவர் கீழே விழுந்தவரை விட பலசாலியாக இருக்கிறார் என்பதை இது காட்டலாம். ஆனாலும் உடல் வலிமை என்பது குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட ஆற்றலே. இதற்கு நேர்மாறாக, ஒருவர் கோபத்தில் இருக்கிறார் என்றாலும் தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு தன்னுள் கோபத்தைத் தூண்டிய மனிதரிடம் சமநிலை தவறாது நிதானமாக நடந்து கொள்வாரேயானால் அவர் உடல் வலிமை கொண்ட மனிதரைக் காட்டிலும் மிகவும் வலிமையானவர் ஆவார். கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்ட மனிதரின் விவேகமான அறிவாற்றலை அவர் கொண்டிருக்கிறார் என்பதை நிரூபிப்பதாக உள்ளது. அது சந்தேகமில்லாமல் நிச்சயமாக உடல் வலிமையை விட அதிக

சக்தி மிக்கதே. இத்தகைய மனிதர் தன்னுடைய விவேகமான திட்டமிடுதலால், எவருக்கும் உடல்ரீதியாக எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாமல் ஒவ்வொரு சண்டையிலும் வெல்வார்.

> மனிதர்களுடனான இறைவனின் செயல்பாடுகள் அமைதி மற்றும் பாதுகாப்பு என்பதன் அடிப்படையில் இருக்கும்பொழுது மனிதர்களும் ஒருவருக்கொருவர் அவ்வகையிலேயே செயல்பட வேண்டும்.

## சமூக அமைதிக்கான சூத்திரம்

சமூக அமைதி என்பதற்கான இலட்சிய சூத்திரம் என்ன? சமூகத்தில் சமமான சூழலை எப்படி உருவாக்குவது? இவற்றிற்கெல்லாம் மதிப்புமிக்கச் சில நல்ல வழிமுறைகளை – கருத்துக்களை இறைத்தூதரின் மொழி ஒன்று நமக்குத் தருகின்றது.

“ஃபித்னா” (கலகம் – குழப்பம்) என்பது உறங்கிக் கொண்டு இருக்கிறது. அதனை எழுப்புபவர் மீது இறைவனின் சாபம் ஏற்படும்” சமூக அமைதிக்கான இயற்கைச் சூத்திரம் இதுவேயாகும்.

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் சுயநலமும், தான் என்ற அகங்காரமும் வேரோடிப் போயுள்ளன என்பதே உண்மையாக இருக்கிறது. இந்தக் குணம் தட்டி எழுப்பப்பட்டுத் தூண்டப்படுமேயானால் அது மிக விரைவாக வெடித்துக் கிளம்பி வன்முறையாக உருப்பெறுகிறது. ஒவ்வொருவரின் நெஞ்சிலும் இந்தக் குணம் உள்ளுறைந்து கொண்டு இருக்கும்படி இயற்கை செய்திருக்கிறது. ஆனால் படைப்புத் திட்டத்தின்படி அது ஒவ்வொருவருக்குள்ளும் உறங்கிக் கொண்டிருக்கிறது. பாரதூரமான நிலைகளில் சமூகத்தில் அமைதியை நிலை நாட்ட எளிய வழிமுறை என்னவென்றால் மக்களின் மனங்களில் உள்ளுறைந்து உறங்கிக் கொண்டிருக்கும் அந்தக் குணத்தை அப்படியே உறக்கத்தில் வைத்திருப்பதுதான்.

அந்தக் குணத்தைத் தட்டியெழுப்பித் தூண்டப்பட்ட நிலைக்கு ஆளானவர்கள் சமூக அமைதியைக் குலைக்கும்படி ஆகிறார்கள். மற்றவர்களிடம் உள்ள இந்தக் குணத்தைத் தூண்டி விடாமல் ஒருவர் தவிர்த்து விலகி இருந்தால் சமூக அமைதி என்பதற்கு எந்தப் பாதிப்பும் வராது. இதிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவென்றால் சமூக அமைதியை நிலைநாட்டுவது என்பது மற்றவர்கள் கைகளில்லை, மாறாக அது நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பதைத்தான்.

உங்களது நேர்மறை நடத்தை மூலம் மற்றவர்களிடம் உள்ள அந்தக் குணத்தைத் தூண்டாமல் தவிர்த்துக் கொள்ள உங்களால் முடியும். மேலும் நிச்சயமாக நீங்கள் மற்றவர்களின் பகைமைக்கு ஆளாகாமல் இருக்க முடியும்.

> *வலிமையானவர் என்பவர் உடல் பலத்தால் அடுத்தவரை வெற்றி கொள்பவரல்ல. மாறாகக் கோபம் எழும் நேரத்தில் தன்னை அடக்கிக் கொள்பவரே வலிமையானவர்.*

ஐஐஐ

## எதிரியுடன் மோத வேண்டாம்

"மக்களே! நீங்கள் எதிரிகளுடன் போரிட விரும்பாதீர்கள், இறைவனிடம் நீங்கள் பாதுகாப்பைக் கேளுங்கள்" என்றும் ஒரு நபிமொழி குறிப்பிடுகிறது. (ஸஹீஹ் அல் புகாரி)

இதன்பொருள் என்னவென்றால் நம்மை எதிரியாக ஒருவர் நினைப்பாரேயானால் அவரை நாமும் எதிரி என்று மனதில் நினைத்துக் கொண்டு அவருடன் சண்டையிடக் கூடாது. மாறாக, அம்மனிதரின் பகைமையையும் தாண்டி அவருடன் மோதாமல் இருக்கும் வழியைத் தேட வேண்டும். அவர் நம்மை எதிரி என்ற வகையில் நடத்தினாலும் கூட அவருடன் சண்டை இடுவதைத் தவிர்க்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

இந்த நபிமொழியின்படி இறைத்தூதர் நம்மை இறைவனிடம் அமைதியைப் வேண்டுமாறு கூறுகிறார். இதன் பொருள் என்னவென்றால், மோதி சண்டையிடுவதற்கு மாறாக அமைதியை நாடும் நம்முடைய அனைத்து முயற்சிகளுடனும் நாம் இறைவனிடம் உதவியைத் தேட வேண்டும். இறைவனிடமான உங்கள் பிரார்த்தனை, வேண்டுதல் என்பது எதிரியின் அழிவு என்பதாக இருக்கக் கூடாது. அதற்கு மாறாக, நீங்கள்:

"இறைவா! மக்கள் என்மீது பகைமை கொண்டிருந்தாலும் நான் வன்முறை மற்றும் மோதல் பாதையைத் தேர்ந்தெடுக்காமல் இருக்கும்படி அருள்வாயாக! நான் எனது வாழ்க்கைப் பயணத்தை அமைதி வழியில் தொடரும்படிச் செய்தருள்வாயாக" என்று இறைஞ்ச வேண்டும்.

இதிலிருந்து இயற்கை நியதியின்படி அமைதி என்பது பொதுவான விதி என்றும் வன்முறை என்பது விதிவிலக்கானது என்றும் நாம் கற்றுக் கொள்கிறோம். ஒரு மனிதரோ அல்லது குழுவோ ஒருவருடைய எதிரியாகத் தோன்றுவாரேயானால்,

அதனை எதிர்கொள்வதற்கு மோதல் போக்கு மட்டுமே வழியல்ல என்றும் நாம் அறிந்து கொள்கிறோம்.

எதிரியால் தோன்றும் எதிர்ப்பைத் தீர்க்க மிகச் சிறந்த மற்றும் ஆற்றல் மிக்க வழி என்பது அமைதி வழிச் செயல்பாடுகளே. அமைதியின் ஆற்றல் என்பது வன்முறை ஆற்றலை விட மிகவும் வலுவானதும் நிறைந்த பலன்களைத் தரக் கூடியதும் ஆகும்.

*சமுக அமைதியை நிலைநாட்டுவது என்பது மற்றவர்கள் கைகளில்லை, மாறாக அது நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது.*

ஜைஜைஜ

## சாத்வீக முறை

“வன்முறையான தன்மைக்கு அருளாளதை இறைவன் மென்மையான தன்மைக்கு அருளுகிறான்”. (ஸஹீஹுல் புகாரி) என்று இறைத்தூதர் நவின்றுள்ளார். இவ்வுலகில் இறைவன் அமைத்துள்ள இயற்கை நியதியின்படி செயல்படுவதாக இது உள்ளது. இந்த நியதியின் அடிப்படையில் வன்முறையற்ற சாத்வீகமான மென்மையான முறையில் நடப்பீர்களேயானால் உங்கள் செயல்பாடு மிகவும் நல் விளைவைத் தரக் கூடியதாக இருக்கும். ஆனால் கடுமையாகவும் வன்முறையாகவும் இருப்பீர்களேயானால் நீங்கள் வெற்றி பெற இயலாது. உங்கள் முயற்சிகளும் தோல்வியிலேயே முடியும்.

ஒருவர் கடுமையான வன்முறை வழியை மேற்கொள்ளும் பொழுது அவரது முயற்சிகள் அனைத்தும் தேவையில்லாமல் இரண்டு வகைகளில் பிரிந்து விடும். ஒருவகையில் தன்னையும் தன் வளர்ச்சியையும் அவர் பார்த்துக்கொள்ள வேண்டும். இன்னொரு வகையில் புறவயமான எதிரிகளை எதிர்த்துப் போராட வேண்டும். இதற்கு நேர்மாறாக, ஒருவர் வன்முறையற்று மென்மையாக இருப்பாரேயானால் தனது சக்தி முழுவதையும் தானும் தன் வளர்ச்சியும் என்ற ஒன்றில் குவிப்பது சாத்தியமாகும். இதன் தொடர்ச்சியாக அவர் மாபெரும் வெற்றி பெற்ற ஒரு மனிதராகி விடுவார்.

மேலே குறிப்பிட்டுள்ள இறைத்தூதரின் மொழி இந்த முழு உலகமும் இயங்கும் இயற்கை நியதியின் அடிப்படையைக் குறித்து நமக்குக் கூறுகிறது. இந்த உலகில் ஒருவர் எதுவொன்றைப் பெறுவதும் இந்த இயற்கை அமைப்பு முறையை மீறாமல் அதற்கேற்றபடி நடந்து கொள்வதானாலேயே ஆகும்.

அதனால்தான் இந்த உலகில் நீங்கள் எதனைப் பெற்ற பொழுதும் அது இந்தக் கொள்கையின் அடிப்படையினாலே பெற்றதாகும். இந்த இயற்கை நியதி மற்றும் முறையிலிருந்து விலகிச் செல்வதால் நீங்கள் எதனையுமே பெற முடியாது என்பது திண்ணம்.

> "ஒருவர் தனது எதிரியுடன் மோதுவதை விரும்பக் கூடாது. என்றும் ஒருவர் அமைதியையும், சாந்தியையும் இறைவனிடம் கோர வேண்டும்"

## வேறுபாடு கொள்வதன் எல்லைகள்

"ஒரு கொடுங்கோல் ஆட்சியாளரின் முன்னிலையில் உண்மையும் நீதியுமான ஒரு வார்த்தையைக் கூறுவது மிகச் சிறந்த ஜிஹாத் ஆகும்" என்று (முஸ்னத் அஹ்மத்) நபிமொழி ஒன்று கூறுகிறது. அதேவேளையில் தனது ஆட்சியாளர் தனக்குப் பிடிக்காததைச் செய்வதைப் பார்க்கும் ஒருவர், அவ்விஷயத்தில் அமைதியாக இருந்து விட வேண்டும் என்று கூறியுள்ளதாகவும் (அல்புகாரி) பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆட்சியாளர் கூறுவதை ஒருவர் கேட்டு அதன்படி நடக்க வேண்டும் என்றும், அந்த ஆட்சியாளார் ஒருவரின் முதுகில் கசையால் அடித்தாலும், ஒருவருடைய செல்வத்தைப் பறித்துக் கொண்டாலும் கூட அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இறைத்தூதர் நவின்றுள்ளதாக (ஸஹீஹ் முஸ்லிம்) பதிவு செய்யப்பட்டுள்ளது.

இறைத்தூதரின் இந்த மொழிகள் இருவேறுபட்ட கட்டளைகளைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. நமது ஆட்சியாளர்களிடமும் ஏதேனும் தவறைக் கண்டால் அதனைத் தவறு என்று நாம் வெளிப்படையாகக் கூற வேண்டும் என்று ஒரு வகையில் உள்ளது. மற்றொரு வகையிலோ நமது ஆட்சியாளர்களிடம் ஏதேனும் குற்றத்தைக் கண்டால் நாம் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் நம்மை அடக்கி ஒடுக்கினாலும் நாம் அதனைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது.

இந்த இரண்டு பரிந்துரைகளும் சிலவற்றை வெளிப்படையாக அறிவிப்பது என்றும் சிலவற்றின் மீது செயல்படுதல் என்றும் வேறுபட்டு இருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. உங்கள் ஆட்சியாளர்களிடம் ஏதேனும் தவறையோ குற்றத்தையோ கண்டால் நல்லதை விரும்பும் அடிப்படையிலும் அறிவுறுத்தி புத்திமதி கூறும் வகையிலும் வெளிப்படையாகக் கூறுவது விரும்பத்தக்கது. ஆனால்

செயல்பாடுகள் என்று வரும்போது ஒருவர் அதிலிருந்து முழுமையாகத் தவிர்ந்து இருக்க வேண்டும். அறிவுறுத்தும் அரசியல் மற்றும் மோதல் அரசியல் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். அறிவுறுத்தும் உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு மோதல் அரசியல் போக்கிலிருந்து ஒருவர் முழுமையாக விலகி இருக்க வேண்டும்.

இந்த வேறுபாட்டை மனதில் வைத்துக் கொள்வது மிக முக்கியமானது. மக்கள் தங்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக மோதல் முறையிலான இயக்கங்களைச் செயல்படுத்திச் 'சீர்திருத்தம்' என்ற பெயரால் தம் ஆட்சியாளர்களை அதிகாரத்திலிருந்து நீக்கச் செயல்படும் பொழுது சமூகத்தில் வன்முறை சூழ்நிலை தவிர்க்க முடியாமல் போய் விடும். ஆயினும், மக்கள் மோதல் அரசியல் முறையிலிருந்து விலகித் தவிர்ந்திருந்து, வார்த்தைகளைக் கொண்டு அறிவுறுத்தியதுடன் நிறைவு அடைந்து கொள்வார்களேயானால் சமூகத்தில் எப்போதும் அமைதி நிலவும். சமூகம் என்பது வன்முறையை வளர்த்தெடுப்பதாக ஆகி விடாது.

> *அமைதியின் ஆற்றல் என்பது வன்முறை ஆற்றல் என்பதை விட மிகவும் வலுவானதும் நிறைந்த பலன்களைத் தரக் கூடியதும் ஆகும்.*

## அமைதி வழிமுறையே சிறந்தது

இறைத்தூதரது மொழித் தொகுப்பான ஸஹீஹ் அல் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ள இறைத்தூதரது மொழி ஒன்று மிக முக்கியமான இஸ்லாமிய போதனை ஒன்றைத் தெளிவாக விளக்குகிறது. "எந்த விஷயம் சம்பந்தமாகவும் இரண்டு வழிமுறைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டி வந்தால் எளிதான வழிமுறையையே இறைத்தூதர் தேர்ந்தெடுப்பார்" என்று அந்தப் பதிவு கூறுகிறது.

வன்முறைச் செயல்பாடு மற்றும் அமைதி வழிச் செயல்பாடு என்பவற்றுக்கு இடையே எளிதானது என்ற தேர்வை நீங்கள் பார்த்தீர்களேயானால், எந்த ஒரு விஷயத்தையும் விவகாரத்தையும் இறைத்தூதர் எதிர்கொள்ளும் போது வன்முறையில்லாத அமைதி வழி முறையையே தேர்ந்தெடுத்தார் என்பதே உண்மையாகும்.

ஆனாலும் கூட, எளிதானது மற்றும் கடினமானது என்ற இரண்டிற்குள் தேர்ந்து எடுப்பதல்ல இது. அமைதி வழிமுறைகளே எப்போதும் சக்தி வாய்ந்தவை என்றும் வன்முறை ரீதியிலான வழிமுறைகள் நற்பலன்களை அளிப்பவை அல்ல என்பதும் இதன்

பொருளாகும். ஒரு பிரச்சினையை வன்முறையிலான வழிமுறை இன்னும் தீவிரமாகவும் சிக்கலாகவும் ஆக்கி விடும். இவ்வகையில் மேற்கூறப்பட்டுள்ள இறைத்தூதரது இந்த மொழி, 'கடினமான வழிமுறைகளில் இலக்கை அடைவது என்பது கடினமானதே' என்ற பொருளைத் தருகிறது. இதனுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது செயல்பாட்டின் இலக்கை அடைவது நிச்சயம் என்பதையும் எளிதான வழிமுறை கொண்டுள்ளது.

> *"வன்முறையான தன்மைக்கு அருளாளதை இறைவன் மென்மையான தன்மைக்கு அருளுகிறான்" (ஸஹீஹ் புகாரி)*

ஐஐஐ

## கடினமல்ல, இணங்கிப் போதல்

"முஃமின் எனப்படும் உண்மையான இறை நம்பிக்கையாளர் என்பவர் காற்று அடித்தால் வளைந்து கொடுக்கும், காற்று நின்றபின் தன் நிலைக்கு மீண்டும் திரும்பும் மென்மையான ஒரு செடியைப் போன்றவர் ஆவார்" என்று இறைத்தூதரது மொழியொன்று (ஸஹீஹ் முஸ்லிம்) கூறுகிறது. இறைத்தூதரது இந்த மொழியின்படி ஒரு புயலை எதிர்கொள்ள இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று புயலடிக்கும் போது விறைப்பாக இருப்பது. மற்றொன்று இளக்கமாக இருப்பது. ஒரு வழிமுறை என்பது வன்முறையில் எதிர்வினை புரிவது. அதே சமயத்தில் மற்றொன்றோ அமைதி வழியில் எதிர்வினை புரிவதாகும். நாம் வன்முறை வழியிலிருந்து விலகியிருந்து அமைதி வழியைத் தேர்ந்தெடுப்பதையே இறைவன் விரும்புகிறான்.

விறைப்புத் தன்மையுடன் புயலை ஒருவர் எதிர்கொள்வது என்பது அவர் தீவிரமான அகங்காரம் சுயநலம் என்பதற்குப் பலியாவதையே காட்டுகிறது. மாறாக அமைதி வழி என்பது மென்மைத் தன்மையுடையதாக உள்ளது. இந்த உலகில் நடத்தையைத் தங்களது அகங்காரமும் சுயநலமும் அதிகாரம் புரியும்படி விட்டவர்கள் அழிவையே சந்திக்க வேண்டி வரும். அதே சமயத்தில் அமைதி வழியைப் பின்பற்றியவர்கள் வெற்றியை அடைவார்கள். இதுதான் இறைத்தூதரின் இந்த மொழியில் கூறப்பட்டுள்ளது. மென்மையான வகையில் நடப்பவர்களை இறைவன் மேன்மைப்படுத்துவான் என்று அந்த மொழி கூறுகிறது.

ஐஐஐ

## அமைதியான குடிமக்கள்

“உண்மையாக வணங்கும் முஃமின் என்பவர் யாரென்றால் அவரிடமிருந்து மக்களும் மக்களின் செல்வமும் பாதுகாப்பாக இருக்கும்” என்று இறைத்தூதர் கூறியுள்ளதாக (இப்னு மாஜா) பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்தச் சமூகத்திலும் வாழ்வதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன. மற்ற மக்களுடன் நீங்கள் அமைதியாக இணக்கமாக வாழலாம் அல்லது மற்ற மக்களுடன் சண்டைச் சச்சரவுகளில் ஈடுபட்டு வாழ்வதை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மேற்கூறப்பட்டுள்ள இறைத்தூதரது மொழி எதனைக் குறிப்பிடுகிறது என்றால் உண்மையான இறை நம்பிக்கையாளர் என்பவர் மற்ற மக்களுடன் அமைதியான குடிமகன் என்ற வகையில் இணங்கி வாழ்வார் என்பதைத்தான். அவர் மற்ற மக்களின் வாழ்க்கை, சொத்து மற்றும் அவர்களது கௌரவம் ஆகியவற்றுக்கு எந்தப் பிரச்சினையையும் பாதிப்பையும் ஏற்படுத்தாமல் வாழ்வார். எந்தச் சூழ்நிலையிலும் அவர் வன்முறையில் ஈடுபடவே மாட்டார்.

ஒருவருக்கொருவர் தொந்தரவு செய்யாமலும் அடக்கி ஒடுக்கும் செயல்களில் ஈடுபடாமலும் ஒரு சமூகத்தின் அங்கத்தினர்கள் எப்படி அமைதியாக வாழ முடியும்? இதற்கு ஒரு வழிதான் உள்ளது. அது என்னவென்றால் ஒருவருக்கு எதிராக மற்றவர்கள் என்ன புகார்களைக் குற்றச்சாட்டுகளைக் கொண்டிருந்தாலும் சமநிலை தவற விடாத வகையில் அவர் உறுதியாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு எதிராக ஒருவரிடம் உள்ள குற்றச்சாட்டுகளையும் புகார்களையும் இதயத்தின் ஆழத்தில் புதைத்து விட வேண்டும். மற்றவர்கள் மீதான எதிர்மறை உணர்ச்சிகளையும் கோபத்தையும் காட்டுவதிலிருந்து தவிர்ந்து விலகி இருக்க வேண்டும். இத்தகைய மக்களைக் கொண்ட ஒரு சமூகத்தில் மற்ற ஒவ்வொருவரின் கைகளிலும் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருப்பார்கள். அத்தகைய அமைதியான சமூகமே இலட்சியப்பூர்வமான மனித சமூகமாகும்.

*வாழ்க்கையில் அடைய வேண்டிய பெரிய இலக்கு இறைவனைக் கண்டடைவதுதான்.*

## வன்முறை ஏமாற்றத்தின் விளைவு

வன்முறை என்பது பறித்துக் கொள்ளப்பட்டுவிட்ட என்ற உணர்விலிருந்து தோன்றுவது. அதே வேளையில் அமைதி என்பது ஒன்றை அடைந்து விட்டது போன்ற உணர்விலிருந்து தோன்றுவது. தங்களிடமிருந்து எதுவோ பிடுங்கிக் கொள்ளப்பட்டு விட்டது அல்லது

திருடப்பட்டு விட்டது என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் எப்போதும் எதிர்மறையான சிந்தனைகளிலேயே மூழ்கி இருப்பார்கள். இந்த உணர்ச்சி, வன்முறை வடிவில் அடிக்கடி வெளிப்படும். ஆனால் மற்றொரு வகையில் தாங்கள் வாழ்க்கையில் எதனையோ அடைந்து விட்டோம் என்று நினைப்பவர்கள் அமைதியான மனநிலையை அனுபவிப்பார்கள். அவர்கள் எப்போதும் அமைதியான வாழ்க்கையையே வாழ்வார்கள்.

மற்றவர்களை வெறுக்கும் தனி நபர்களும் குழுக்களும் மற்றவர்களுக்கு எதிராகச் சில வேளைகளில் வன்முறையில் ஈடுபடும்படியான நிலைக்குச் செல்வார்கள். அவர்களது இந்த வகைச் செயல்பாடு அவர்களிடமிருந்து எதனையோ பிடுங்கிக் கொள்ளப்பட்டதை நிரூபிப்பதாக இருக்கும். இதற்கு மாறாக, அமைதியான முறையில் வாழும் தனி நபர்களும் குழுக்களும் தங்கள் வாழ்க்கையில் எதை விரும்பியிருந்தார்களோ அதனை அடைந்து விட்டதை நிரூபிப்பது போல அவர்களது செயல்கள் இருக்கும்.

பறித்துக் கொள்ளப்பட்டது போல சிலர் நினைப்பதற்கான காரணம் என்ன? எதனையோ அடைந்து விட்டதாக எப்போதும் நிறைவுடன் வாழ்பவர்கள் யார்?

வாழ்க்கையில் அடைய வேண்டிய பெரிய இலக்கு இறைவனைக் கண்டடைவதுதான். அதே வேளையில், வாழ்க்கையில் பறித்துக் கொள்ளப்பட்டதான – இழந்ததான பெரிய ஒன்று இறைவனைக் கண்டடையாதது. நீங்கள் கண்டடைந்து விட்டவர்கள் என்றால் நீங்கள் கண்டடைய வேண்டிய வேறு ஒன்றுமே இருக்காது. இதற்கு நேர்மாறாக, இறைவனைக் கண்டடைவதில் தோல்வியுற்றவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகப் பறித்துக் கொள்ளப்பட்டால் – இழந்தால் துன்பமடைவார்களோ அந்தளவிற்கு அதனை அனுபவிப்பார்கள். மேலும் அந்தப் பறிகொடுத்த – இழந்த உணர்விலிருந்து அவர்களைக் காப்பாற்ற எதனாலும் முடியாது.

> *இறைவனைக் கண்டடைந்து விட்டவர்கள் என்றால் நீங்கள் கண்டடைய வேண்டிய வேறு ஒன்றுமே இருக்காது.*

ꩰꩰꩰ

## காத்திருப்பதும் கூட ஒரு தீர்வே

“நல்ல நிலைக்காகக் காத்திருப்பது ஓர் இறைவணக்கமாக இருக்கிறது” என்பது இறைத்தூதரின் மொழியாகத் ‘திர்மிதி’யில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தனி நபரும் கூட்டமும் கடினமான சூழ்நிலையை மீண்டும் மீண்டும் எதிர்கொள்கிறார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் மக்கள் அறிந்தோ அறியாமலோ அந்தக் கடினமான சூழ்நிலை நிரந்தரமானது என்று எடுத்துக் கொள்கிறார்கள். மேலும் அவர்கள் உடனடியாக அந்தச் சூழ்நிலையை எதிர்த்துப் போராடத் தொடங்குகிறார்கள். ஆனால் இத்தகைய போராட்டம் எப்போதும் பலனளிப்பதில்லை. இதனால் ஏற்படும் ஒரே விளைவு என்னவென்றால் முன்பே இருக்கும் கடினமான சூழ்நிலையை இன்னும் மோசமானதாக ஆக்குவதுதான்.

எத்தகைய கடினமான சூழ்நிலையும் நிரந்தரமானதல்ல. அது எப்போதும் தற்காலிகமானதே. எனவே, கடினமான சூழ்நிலைக்கான ஒரே தீர்வு காத்திருக்கும் கொள்கையாகும். அதாவது, ஒரு கடினமான சூழ்நிலைக்காக ஒருவர் தேவையில்லாமல் போராடத் தொடங்கக் கூடாது. மாறாக, ஒருவர் ‘காத்திருந்து பார்ப்போம்’ என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பதால் நீங்கள் மன அமைதியை இழப்பதிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளலாம். மேலும் எது நடக்க இருக்கிறதோ அது அதற்கான நேரத்தில் நிச்சயம் நடக்கும்.

மக்கள், பிரச்சினையை எதிர்கொள்ளும்போது பொதுவாக அதற்கு உடனடியான தீர்வையே எதிர்நோக்குகின்றனர். இதுதான் உள்ளே ஒளிந்திருக்கும் – உறைந்திருக்கும் பிரச்சினையாக இருக்கிறது. மாறாக, ஒருவர் ‘காத்திருந்து பார்ப்போம்’ என்ற அணுகுமுறையை கைக் கொள்வாரேயானால், பிரச்சினை என்பது பிரச்சினையாகவே இருக்காது.

*இறைவன் கொடுக்க இருக்கும் அருட்கொடையை அடைவதற்காகக் காத்திருப்பது மிகச் சிறந்த வணக்கம்.*

## அடக்குமுறை : இறைவனின் எச்சரிக்கை

“உணவு உண்பவர்கள் உணவுக் குவளைகளை நோக்கிப் பாய்ந்தோடி வருவதைப் போலவே விரைவில் பிற சமூகங்கள் உங்களை நோக்கிப் பாய்ந்தோடி வரக்கூடும்” என்று இறைத்தூதர் முன்னறிவிப்பு செய்ததாக இறைத்தூதரது மொழிகளின் தொகுப்பான முஸ்னத் அஹ்மதில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள் இந்த முன்னறிவிப்பை உண்மை என்று ஆக்கி விட்டன. இது

(European colonialists) ஐரோப்பிய காலனியவாதிகளின் (agency) முகமையால் தொடங்கி வைக்கப்பட்டது. பிற சமுதாயத்தினருடன் ஐரோப்பியர்கள் பின்னர் சேர்ந்து கொண்டார்கள். இந்தச் செயல்பாடு இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கேள்வி என்னவென்றால் இது ஏன் நடந்தது என்பதுதான்.

இது இறைச் செயல்பாட்டின்படியே நேரடியாக நடந்தது என்பதைக் குர்ஆனில் மேற்கொண்ட ஓர் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. இதனைப் பொறுத்த வரையில் இறைவனின் செயல்பாடு என்பது சமுதாயங்களையோ மக்களையோ இறைவனது எச்சரிக்கையை அனுப்பித் தட்டி எழுப்புவதுதான். இது மக்களை அதிர வைக்கும் ஓர் அதிர்ச்சி வைத்தியமே. மக்கள் தங்களைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இது செய்யப்படுகிறது.

குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

“எமது வேதனை (அவர்களிடம்) வந்தபோது அவர்கள் பணிந்திருக்க வேண்டாமா? உண்மையில் அவர்களின் இதயங்கள் இறுகிவிட்டன. (ஏனெனில்) அவர்களின் செயல்களைச் சாத்தான் அவர்களுக்கு அழகாக்கிக் காட்டினான்.” (06:43)

குர்ஆனின் இந்த வசனம் மனிதர்களின் பொதுவான ஒரு மனப்போக்கைக் குறிப்பிடுகிறது. அதாவது தவறான செய்கைகளை அழகான வலுவான வார்த்தைகளைக் கொண்டு மூடி அதன் தவறு வெளித்தெரியாமல் மறைப்பதாகும். இன்றைய காலத்தில் முஸ்லிம்களிடையே இதுவே நிகழ்கிறது. இக்கால முஸ்லிம் தலைவர்கள் மனப்பூர்வமாகவோ வேறு வகையிலோ குர்ஆனின் இந்த வசனம் குறிப்பிடுவதைச் செய்கிறார்கள்.

இக்கால முஸ்லிம்கள் பிற சமுதாயத்தினரால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எல்லாம் இறைவனால் முன் கூட்டியே அறிவிக்கப்பட்டு விட்டவையாகும். ஆனாலும் முஸ்லிம் தலைவர்கள் இந்தப் பிரச்சினைகளை ‘ஒடுக்குமுறை’ ‘சதிவேலை’ போன்ற வார்த்தைகளைக் கொண்டு கூற ஆரம்பித்தனர். இதன் விளைவாக முஸ்லிம்கள் தங்களது சொந்தத் தவறுகளை உணர்ந்து சரி செய்துகொள்ள வேண்டியதாக இந்தச் சம்பவங்களைக் கருதுவதில் தவறி விட்டனர். முஸ்லிம் தலைவர்களின் இந்தத் தவறான வழிகாட்டுதலால் முஸ்லிம்களின் முழுக் கவனமும் மற்ற சமுதாயத்தினருக்கு எதிராக திரும்பி விட்டது. இந்தச் சம்பவங்கள் முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டு மீளாய்வு செய்து கொள்வதற்காக நிகழ்ந்தவையாகும். ஆனால் இது மற்ற

மக்களை விமர்சிக்கத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய மனப்போக்கு வன்முறையிலும் தீவிரவாதத்திலும் ஈடுபடும் அளவுக்கு இன்று வளர்ந்து பெரிதாகி விட்டது.

> *தீவிர எதிர்ப்புவாதம் என்பது எப்போதுமே வன்முறையை உருவாக்கி இருக்கும் பிரச்சினையை மிகப் பெரியதாக்கி விடுவதாக உள்ளது. இதற்கு நேர்மாறாக உள்ள சூழ்நிலையில் நேர்மறையாகச் செயல்படுவது சமூகத்தில் எந்தப் பிரச்சினையையும் உண்டாக்காமல் சமூக அமைதியைத் தக்க வைத்துக்கொண்டு நோக்கத்தை அடையக் கூடியதாக உள்ளது.*

## மௌனத்தின் ஆற்றல்

முஸ்லிம்களின் இரண்டாவது கலீஃபாவான உமர் ஃபாரூக் கூறியதாகப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: “பொய்மையை (batil) மௌனமாக இருந்து அழியுங்கள்”

இயற்கை நியதிப்படி உண்மை என்பது நிலைத்து வாழும் எனும்படியாகவும் நேர்மையின்மை என்பது அழியக் கூடியதாகவும் உள்ளது. எனவே நேர்மையின்மை என்பதை இல்லாமல் செய்து விட மௌனமாக இருத்தலே போதுமானது. அதனைப் பற்றிப் பேசுவதும், அதற்கு எதிராகச் செயல்படுவதும் அதனை நீடித்து இருக்கவே செய்யும். பொய்மை என்பதைப் புறந்தள்ளி ஒதுக்கி விட்டு மௌனமாக இருப்பது அதனை மரணிக்கச் செய்யும்.

பொய்மையைப் பார்த்து மௌனமாக இருப்பது என்பது அதனை ஒதுக்கித் தள்ளுவதாகும். அதாவது எந்த விதத்திலும் அதற்கு எந்த எதிர்வினையையும் காட்டாமல் – எந்த எதிர்ப்பையும் தெரிவிக்காமல் இருப்பது. இயற்கையின் ஆற்றலை உணர்ந்து அதன்மீது முழு நம்பிக்கை வைத்தவர்களால் மட்டுமே இவ்வகையில் மௌனமாக இருக்க முடியும். இப்படிப்பட்ட உணர்தல் இல்லாதவர்கள் பொய்மைக்கு எதிர்ப்பைக் காட்டுவார்கள். அப்படிச் செய்வது அதற்கு உயிரூட்டக் கூடியதாகி விடும்.

> *ஒருவர் உங்களை அவருடைய எதிரியாகக் கருதுவாரேயானால், அவரை உங்களுடைய நல்ல நண்பர் என்று கருதி நீங்கள் எதிர்வினையாற்ற முடியும்.*

அப்படிச் செய்தால் அவரிடமிருக்கும் உங்கள் மீதான பகைமை ஓடி மறைந்து விடும்.

ஜஜஜ

## இருக்கும் நிலையிலேயே நேர்மறைச் செயல்பாடு

நீங்கள் எதையாவது செய்ய விரும்பிய உடனேயே ஏதாவது ஒரு தடையை எதிர்கொள்வீர்கள். இது தனி மனிதனுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நிகழக் கூடியதாகும். இந்தத் தடைகளை எதிர்த்து உடைத்துச் செய்ய விரும்பியதைச் செய்வது ஒரு வழிமுறையாகும். இதைத்தான் அடிப்படைவாத பிற்போக்குத்தனத்துக்கு எதிர்ப்பு என்று பொதுவாக அழைக்கிறார்கள்.

இந்த எதிர்ப்புவாதம் என்பது தீவிரவாதத்தின் விருப்பம் கொண்டுள்ள, மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடிய குறிப்பிட்டவர்களையே கவர்ந்து இழுப்பதாக உள்ளது. இருந்தாலும் இது எந்த வகையான உடன்பாடான பலனையும் தருவதற்குப் பயன்படுவதில்லை. இது நடப்பில் இருக்கும் அமைப்புக்கு மட்டும் நாசத்தை விளைவிப்பதில்லை. மாறாகப் பல நூற்றாண்டுகளாக உருவாகி வளர்ந்து வந்து சமூக மரபுகளுக்கும் அழிவை ஏற்படுத்துகிறது.

இந்தத் தீவிர எதிர்ப்புவாதம் நாசத்தை விளைவிக்கும். இரத்தக்களறி மற்றும் நாசத்தால் மக்கள் சொல்ல முடியாத பயங்கரங்களுக்கு ஆளாகிறார்கள். இது கொள்கை ரீதியாகச் சிலருக்குக் கவர்ந்திழுக்கக் கூடியதாகத் தோன்றினாலும், தொடரும் அரசியல் நிகழ்வுகள் என்ற வகையில் இந்தத் தீவிரவாத எதிர்ப்புவாதம் உடன்பாடான எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதை அனுபவங்கள் காட்டுகின்றன.

வாழ்க்கையில் விலகிச் சென்று விட முடியாத சவால்களை எதிர்கொள்ளும் இன்னொரு வழி முழுக்க முழுக்க எதிர்த்துச் செயல்படுவதைத் தவிர்த்து அதற்கு மாறாக சாத்தியமான வகையின் எல்லைக்குட்பட்டு ஒருவர் தனது முயற்சிகளை, செயல்களைத் திட்டமிட்டுக் கொள்வதாகும். அந்த நேரத்திற்கு ஏற்றாற்போல அதே நிலையில் எஞ்சியிருக்கும் வாய்ப்புகளை ஒருவர் பயன்படுத்த முடியும். இந்தச் செயல்முறையை 'இருக்கும் நிலையிலேயேயான நேர்மறைச் செயல்பாடு' என்று கூறலாம்.

தீவிர எதிர்ப்புவாதம் என்பது எப்போதுமே வன்முறையை உருவாக்கி இருக்கும் பிரச்சினையை மிகப் பெரியதாக்கி விடுவதாக

உள்ளது. இதற்கு நேர்மாறாக உள்ள சூழ்நிலையில் நேர்மறையாகச் செயல்படுவது சமூகத்தில் எந்தப் பிரச்சினையையும் உண்டாக்காமல் சமூக அமைதியைத் தக்க வைத்துக் கொண்டு நோக்கத்தை அடையக் கூடியதாக உள்ளது. முதலாவது அழிவைத் தரக் கூடியதாகவும் இரண்டாவது ஆக்கப்பூர்வமானதாகவும் உள்ளது.

பண்டைக்கால அரேபியாவில் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) செயல்படுத்திய சீர்திருத்த முறை உள்ள சூழ்நிலையிலேயே நேர்மறையாகச் செயல்படுவதாக இருந்தது. உதாரணத்திற்கு ஒன்று, அந்த நேரத்தில் காபா ஆலயத்திற்குள் 360 சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் ஆரம்பகால இறைவசன வெளிப்பாடுகளில் காபாவிலிருந்து அந்தச் சிலைகளை அகற்ற எந்தக் கட்டளையும் வரவில்லை. மாறாகக் குர்ஆனின் ஆரம்பகால அறிவிப்பு,

“உமது ஆடைகளைத் தூய்மையாக வைப்பீராக!” (74:04)

என்பதாக இருந்தது. இதன் பொருள், ஒருவர் தனது அறநெறிப் பண்புகளைத் தூய்மை செய்து கொள்வதென்பது மற்றவர்களையும் கூட தூய்மைப்படுத்துவதாகும்.

## வன்முறை நியாயமற்றது

வன்முறை என்பது மனித இயல்புக்கு எதிரானது. அது மனிதத்துவத்தைக் கொன்று விடுகிறது. அனைத்து குற்றங்களை விடவும் மிக மோசமான குற்றமாக அது இருக்கிறது. இருந்த போதிலும் இந்த உண்மைக்கு மாறாக இன்னும் ஏன் சிலர் வன்முறையில் ஈடுபடுகிறார்கள்? இதற்கான காரணம் மிக எளிதானது. வன்முறையாளர்கள் வன்முறைக்குப் போலியான ஒரு நியாயத்தை உருவாக்கிக் கொண்டு அவர்களது வன்முறைச் செயல்பாடு நியாயமானதுதான் என்று நம்பத் தொடங்குகிறார்கள்.

ஆனால். வன்முறைக்கான ஒவ்வொரு தனி நியாயமோ காரணமோ தவறானது என்பதே உண்மையாக இருக்கிறது. ஆனால் தனி நபரோ ஒரு குழுவோ வன்முறையில் ஈடுபடும் அதேசமயம் வன்முறையற்ற அமைதி வழிமுறையைத் தேர்ந்தெடுப்பதற்கான சாத்தியம் இருந்து கொண்டே இருக்கிறது. இருந்தும் கூட அவர்களின் தேர்வு வன்முறையாகவே இருக்கிறது.

வன்முறை கைவிடப்பட வேண்டும். அமைதி என்பதை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே

உண்மையாக இருக்கிறது. எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் ஒருவர் ஒருபோதும் வன்முறையை நாடக் கூடாது. நிலைமை என்னவாக இருந்தாலும் ஒருவர் அவசியம் அமைதி வழிமுறைகளிலேயே உறுதியாக இருக்க வேண்டும்.

*நீங்கள் இறைவனைக் கண்டு கொண்டால் மற்ற எதையும் தேடி அடைய வேண்டிய தேவையில்லை.*

## பகைமைக்குத் தீர்வு

மக்கள் சில சமுதாயத்தினரைத் தங்கள் எதிரிகள் என்றே எப்போதும் நினைக்கிறார்கள். பகைமையினால் ஏற்படும் விளைவுகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது என்ற பேரில் தங்களுடைய எதிரி என்று கற்பனையாக நினைத்துக் கொண்டிருக்கும் சமுதாயத்தினருடன் சண்டையிடத் தொடங்குகிறார்கள். ஆனாலும் அவர்களுடைய கற்பனை எதிரி என்பது முழுக்கத் தவறானதாகவே இருக்கிறது. மேலும் கற்பனையாக எதிரி என்று நினைத்துக் கொள்ளப்பட்டவர்களிடமிருந்து கற்பனையான அச்சுறுத்தலை எதிர்கொள்ள செய்யப்படும் அனைத்துமே தவறானவை.

பகைமை என்பது மனித இருத்தலின் நிலையான அம்சம் அல்ல. அது மனித இருத்தலின் மேற்படிமம் போல ஒன்றுமற்ற அற்பமான அம்சமாகும். உடன்பாடான செயல்கள் மூலம் எந்த ஒரு பகைமையையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடியும். அது கண்ணாடி மேல் படிந்துள்ள சிறு கறை போன்றதே. சிறிது தண்ணீரைக் கொண்டு அந்தக் கறையை நீக்கி விட முடியும். கண்ணாடியில் படிந்துள்ள சிறு கறை என்பது அதற்கான பிரச்சினை அல்ல. அதை நீரைக் கொண்டு நீங்கள் கழுவாமல் இருப்பதிலேயே பிரச்சினை உருவாகிறது.

கைதட்டி ஒலி எழுப்ப இரண்டு கைகள் தேவை. ஒரு கையைக் கொண்டு நீங்கள் ஓசையை எழுப்பி விட முடியாது. அதே போன்று பகைமை என்பதும் இரு பக்க விவகாரமாகும். ஒருவர் உங்களை அவருடைய எதிரியாகக் கருதுவாரேயானால், அவரை உங்களுடைய நல்ல நண்பர் என்று கருதி நீங்கள் எதிர்வினையாற்ற முடியும். அப்படிச் செய்தால் அவரிடமிருக்கும் உங்கள் மீதான பகைமை ஓடி மறைந்து விடும். இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட மிகச்

*சிறந்த வழி உங்களை எதிரியாக நினைப்பவரை நீங்கள் எதிரியாக நினைக்காமல் இருப்பது தான்.*

ஐஙஐஙஐங

## ஆயுத சேமிப்பால் பயனில்லை

*அருகில் இருக்கும் மற்ற சமுதாயத்தினரிடமிருந்து ஏற்படும் அபாயத்திலிருந்து தமது குடும்பத்தைக் காத்துக் கொள்வது குறித்து ஒரு வர்த்தகருக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. தமது குடும்பத்தினரைக் காக்கக் குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் உரிமம் உள்ள ஒரு துப்பாக்கியை வாங்குவது அவரது உத்தியாக இருந்தது. “நானும் எனது குடும்பமும் இப்போது பாதுகாப்பாக உள்ளோம்” என்று அவர் சொன்னார். “கலவரங்களைப் பற்றி இப்போது எனக்கு பயமில்லை” என்றும் அவர் சொன்னார்.*

*அந்த வர்த்தகருக்கு வர்த்தகம் சம்பந்தமான கொள்கைகள் வழிமுறைகள் தெரிந்திருக்கலாம். ஆனால் அவருக்குச் சமூகத்தில் வாழ்வது குறித்த கொள்கைகளும் வழிமுறைகளும் தெரியவில்லை; ஒரு துப்பாக்கியைக் கொண்டு ஒருவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. ஒரு சமூகத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கு மற்றவர்களுக்கு நாம் நல்ல அண்டை அயலாராக இருக்க வேண்டும். உங்களிடமிருந்து உங்கள் அண்டை அயலார் அபாயமின்றிப் பாதுகாப்பாக இருப்பாரேயானால் அவர்களுக்கிடையில் நீங்களும் பாதுகாப்பாக இருப்பதைக் காண முடியும். வெறுப்பு என்பது வெறுப்பையே பதிலாகக் கொண்டு வரும் மற்றவர்கள் நலனில் நமக்கு அக்கறை இருக்குமேயானால், நம்மீது அக்கறையையும் நேசத்தையும் அது திருப்பிக் கொண்டு வரும்.*

*ஒரு துப்பாக்கியைப் பயன்படுத்துவதன் விளைவும் அதன் பயனின்மையும் கண்கூடாகத் தெரிந்த ஒன்றே. ஒரு கலவரம் வெடித்தால், மக்களைத் துப்பாக்கியால் சுடுவதால் பிரச்சினையைத் தீர்த்து விட முடியுமா? முடியவே முடியாது. மக்கள் மீது துப்பாக்கியால் சுடுவது என்பது கடுமையான குற்றம் என்பது ஒருவருக்கு அவசியம் தெரிய வேண்டும்.*

*ஒரு சமுதாயத்திற்கு எதிரான வன்முறை என்பது, சம பலமுள்ள இரு சாரார் சண்டையிட்டுக் கொள்வது போலத் தோன்றலாம். ஆனால் காவல் துறையினரை எதிர்த்துச் சண்டையிடுவது என்பது வேறானது. இத்தகைய சூழ்நிலையில் துப்பாக்கியைப் பயன்படுத்துவது என்பது கோபமேறிய ஒரு காளையைத் தாக்க வரும்படி அழைப்பதாகும். இந்தச் செயல்பாடு தற்காத்துக் கொள்ளும்*

செயலல்ல, மாறாக அழிவைச் சுயமாகத் தேடிக் கொள்வதுதான் என்பது தெளிவான ஒன்று.

> ஒரு துப்பாக்கியைப் பயன்படுத்துவதன் விளைவும் அதன் பயனின்மையும் கண்கூடாகத் தெரிந்த ஒன்றே. ஒரு கலவரம் வெடித்தால், மக்களைத் துப்பாக்கியால் சுடுவதால் பிரச்சினையைத் தீர்த்து விட முடியுமா? முடியவே முடியாது. மக்கள் மீது துப்பாக்கியால் சுடுவது என்பது கடுமையான குற்றம் என்பது ஒருவருக்கு அவசியம் தெரிய வேண்டும்.

ஐஐஐ

## மனசாட்சியே சிறந்த நீதிபதி

வேறுபட்ட சமயத்தைச் சேர்ந்த இருவர் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் வசித்து வந்தனர். அவர்களுள் ஒருவர் ஒரு வீட்டை கட்டினார். பக்கத்தில் இருந்த ஒரு நிலத்தின் பேரில் இருவருக்கும் முரண்பாடு ஏற்பட்டது. அந்த நிலம் தம்முடையதே என்று இருவரும் கூறினர். அந்த இருவரில் ஒப்பந்தத் தொழில் செய்பவராயிருந்த ஒருவர், வீட்டைக் கட்டிய தன் அண்டை வீட்டுக்காரர் வீடு கட்டியது தவறு என்று கூறி, தனது சகோதரர்கள் சிலரை அழைத்து வந்து வீடு கட்டியவரின் வீட்டிற்கு வெளியில் கூடி நின்று அவருக்கு எதிராக கோஷமெழுப்பினார்.

வீடு கட்டியவரிடம் ஒரு துப்பாக்கி இருந்தது ஆனால் அதை அவர் பயன்படுத்தவில்லை. மாறாக வெறுங்கையுடன் அவர் வீட்டை விட்டுத் தனியாக வெளியே வந்தார். கோஷங்களை எழுப்பிய கூட்டத்தாரிடம் அவர்களுடைய தலைவர் யார் என்பதைத் தவிர வேறெதுவும் அவர் பேசவில்லை. கூட்டத்திலிருந்து வெளியே வந்த ஒருவர் தான்தான் தலைவர் என்று கூறி, “என்ன வேண்டும்” என்று கேட்டார்.

வீடு கட்டிய நபர் கூட்டத்தின் பக்கம் திரும்பி அவர்களை அங்கேயே இருக்கும்படி கேட்டுக் கொண்டார். பிறகு அவர் அந்தத் தலைவரை தன் வீட்டிற்குள் கூட்டிச் சென்று நாற்காலியில் அமருமாறு கேட்டுக் கொண்டார். அந்தக் கூட்டம் ஏன் தன் வீட்டின் முன் கூடியுள்ளது என்று அவர் தலைவரிடம் கேட்டார்.

அதற்கு அந்தத் தலைவர் கோபமாக, “நீங்கள் எங்கள் சகோதரரின் நிலத்தை அபகரித்துள்ளீர்கள், அதனால்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்” என்றார்.

அதற்கு வீடு கட்டிய அந்த நபர் மென்மையாக "எந்தச் சொத்தும் அதற்கு உரிமையானவர் யார் என்பதை அதிகாரப்பூர்வமான பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த நிலத்தின் உரிமையாளர் யார் என்பதை இந்தப் பத்திரங்கள் தீர்மானிக்கும். எனவே நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் எனது பத்திரங்களையும் எனது அண்டை வீட்டாரின் பத்திரங்களையும் எடுத்துப் படித்துப் பாருங்கள். இந்த விவகாரத்தில் நீங்களே நீதிபதியாக இருங்கள். பத்திரங்களை நன்கு படித்துப் பார்த்த பிறகு நீங்கள் என்ன முடிவு செய்கிறீர்களோ அதனை நான் எந்த நிபந்தனையும் இன்றி ஏற்றுக்கொள்கிறேன்" என்றார்

இப்போது அந்தக் கூட்டத்தின் தலைவர் சட்டென்று அமைதியாகி நட்பு ரீதியிலானார். அந்த முஸ்லிமின் வீட்டிற்குள் அந்தத் தலைவர் கோபத்துடன் வந்தார். ஆனால் இப்போது அவர் புன்னகையுடன் வெளியேறினார். பின்னர் அவர் கூட்டத்தை நோக்கி, "நீங்கள் அனைவரும் விட்டுக்குத் திரும்புங்கள் மியான் ஜி!" (முஸ்லிம் ஒருவரை மரியாதையாக அழைக்கும் சொல்) இந்த விவகாரத்தில் என்னையே முடிவெடுக்கும்படி சொல்லி விட்டார். இருவரது பத்திரங்களையும் நான் பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறேன்" என்றார்.

அதன்படியே அந்தத் தலைவர் இரண்டு பத்திரங்களையும் எடுத்துக் கொண்டு தன் வீடு சென்றார். சில நாட்களில் (பத்திர ஆய்வின்படி) அந்த முஸ்லிமுக்கு ஆதரவாகவே அவர் முடிவைக் கூறினார்.

அந்த முஸ்லிம் நபர் தனது துப்பாக்கியை எடுத்துக் கூட்டத்தினரை நோக்கிச் சுட்டிருந்தால், அது நிச்சயமாக அந்தக் கூட்டத்தினரிடையே "அந்நஃப்ஸுல் அம்மாரா" எனப்படும் சுய உணர்வைத் தூண்டி இருக்கும். விவகாரம் அப்படியே அந்த முஸ்லிமுக்கு எதிராகத் திரும்பி இருக்கும். ஆனால் விவேகத்தையும் காரண காரிய அறிவையும் அவர் பயன்படுத்தியது "அந்நஃப்ஸுல் லவ்வாமா" எனப்படும் மனசாட்சியை அக்கூட்டத்தினருக்குள் எழுப்பி விட்டது.

> *மனசாட்சி எழுமேயானால் அது நீதிக்குச் சாதகமாகவே இருக்கும். அது ஒருபோதும் அடக்குமுறை மற்றும் அநீதிக்குச் சாதகமாக இருக்காது.*

## வெற்றி என்பது தோல்வியாகவும் இருக்கக் கூடும்

Pyrrhus என்பவர் கி.மு. மூன்றாவது ஆண்டில் வாழ்ந்த கிரேக்க அரசர். அவர் ரோமர்களுடன் போரிட்டு வென்றார். ஆனால் இந்தப் போரினால் அவருடைய படையும், அவரது நாட்டின் பொருளாதாரமும் நாசமானது. இந்த வெற்றி பைரூஸ்சுக்கு மேலோட்டமான வெற்றியாகவே இருந்தது. ஆனால் விளைவுகளைக் கொண்டு பார்த்தபோது அது தோல்வியை ஒத்ததாகவே இருந்தது. இந்த வரலாற்றுச் சம்பவத்தைக் கொண்டுதான் ‘Pyrrhic victory’ ‘பைரிக் வெற்றி’ என்ற சொல்லாடலே வந்தது. அதாவது வெற்றி என்று தோன்றும். ஆனால் உண்மையில் அது முழுமையான தோல்வியாகவே இருக்கும் என்பதையே அந்தச் சொல்லாடல் குறிக்கிறது.

பொதுவாகவரலாற்றில்போர்என்பதைநீங்கள்ஆய்வுசெய்தால் பெரும்பாலான வெற்றிகள் என்பவை ‘பைரிக் வெற்றி’களாகவே இருக்கும் என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்டதல்ல. வெற்றி பெறும் ஒவ்வொருவரும் இரண்டு இழப்புகளை அவசியம் சந்தித்தே ஆக வேண்டும். ஒன்று வாழ்க்கை மற்றும் வளங்களின் அழிவு. மற்றொன்று தோல்வியடைந்தவர்களின் மனதில் முண்டெரியும் வெறுப்பு எனப்படும் நெருப்பு. வெற்றி பெற்ற எவரும் இந்த இரண்டு இழப்புகளிலிருந்து தப்பிக்க முடியாது. சில வெற்றியாளர்கள் இந்த இழப்புகளை உடனே சந்திக்கலாம். சிலர் பின்னாட்களில் சந்திக்கலாம் என்பது மட்டுமே இதில் வேறுபடலாம்.

இந்த இழப்பு என்பது வன்முறைச் செயல்பாடுகளை பயன்படுத்தியதுடன் தொடர்புடையது. அமைதி வழிமுறை எப்போதுமே வெற்றியை அல்லாது வேறெதையும் தருவதில்லை. இந்த அமைதி வழிமுறை என்பதைப் பொறுத்தமட்டில் தோல்வி என்பதே கிடையாது. அமைதி வழிமுறைகளைப் பயன்படுத்தியதில் எவ்வளவுக்கு எவ்வளவு தோல்வி போலத் தோன்றினாலும் அது உண்மையில் வெற்றியாகவே இருக்கிறது. இது ஏனென்றால் அமைதி வழிமுறையைப் பயன்படுத்துபவர் போரில் இழப்பைச் சந்திக்கலாம். ஆனால் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை அவர் இழப்பதில்லை. இந்த வாய்ப்புகளும், சாத்தியக்கூறுகளும் அவருக்குக் கிடைக்கக் கூடிய நிலையிலேயே இருக்கும். இவற்றின் மூலம் அவரால் புதிய முயற்சிகளைச் செய்து வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும்.

> *வெற்றி பெறும் ஒவ்வொருவரும் இரண்டு இழப்புகளை அவசியம் சந்தித்தே ஆக வேண்டும். ஒன்று வாழ்க்கை மற்றும் வளங்களின் அழிவு. மற்றொன்று*

தோல்வியடைந்தவர்களின் மனதில் மூண்டெரியும் வெறுப்பு எனப்படும் நெருப்பு. வெற்றி பெற்ற எவரும் இந்த இரண்டு இழப்புகளிலிருந்து தப்பிக்க முடியாது.

ஐஐஐ

## குறை கூறுவதை உடனே நிறுத்துங்கள்

குற்றங்கூறும் மனநிலை மக்களை எதிர்மறையாகவே சிந்திக்க வைக்கிறது. எப்போதும் குறை கூறிக் கொண்டிருக்கும் ஒருவரால் உடன்பாடாகச் சிந்திக்க இயலாமலாகி விடுகிறது. இந்த வகை சிந்தனை அனைத்து கேடுகளுக்கும் ஆணி வேராக உள்ளது என்பதில் எந்தச் சிறு சந்தேகமும் இல்லை. பெரும்பாலான அனைத்து வன்முறை நிகழ்வுகளிலும் நிலையாகக் குற்றம் கூறும் இந்த மனநிலையே செயலாற்றி இருப்பதைக் காணலாம்.

மக்கள் ஒருவரை ஒருவர் குற்றம் கூறுவது தவிர்க்க இயலாதது என்ற வகையிலேதான் இந்த உலகம் படைக்கப்பட்டிருக்கிறது. எனவே நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் மற்றவர்களைக் குறை கூறும் எண்ணம் நமது மனதில் எழுந்த உடனேயே அதனை அகற்றி விட வேண்டும். பொதுவாக நடப்பது என்னவென்றால் நமது மனதினுள் குற்றம் கூறுதல் முதலில் உருவாகிறது. பின்னர் நாம் அதற்கு நிலையாகப் பழகி விட்டால் அது படிப்படியாக நமது யோசனையற்ற மனதினுள் வளர்ந்து விடுகிறது. பின்னர் அகற்றி விட முடியாத அளவுக்கு அது ஆழமாக வேரூன்றி விடுகிறது.

இத்தகைய நிலையில், விவேகமான அணுகுமுறை என்பது குற்றம் கூறும் அனைத்து எண்ணங்களையும் முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவதுதான். உங்கள் மனதில் அது தோன்றியவுடனே அதனை நீங்கள் அகற்றி விட வேண்டும். நீங்கள் அப்படிச் செய்யாமல் விட்டு விட்டால் அவை உங்கள் ஆன்மாவில் ஒருங்கிணைந்த ஒன்றாகப் படிப்படியாக ஆகிவிடும். மேலும் உங்களது சிந்தனை எதிர்மறையானதாகி விடும். மற்றவர்களை உங்கள் எதிரிகளாக நீங்கள் நினைக்க ஆரம்பித்து விடுவீர்கள்.

உங்களுக்கு எதிரான விளைவை ஏற்படுத்தும் என்றாலும் கூட நீங்கள் வன்முறையிலோ செயல்முறை எதிர்ப்பிலோ கூட ஈடுபடும்படியாகி விடும்.

குற்றம் கூறுதலை முளையிலேயே கிள்ளி விடுவது குறித்து குர்ஆனின் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"(மக்களே!) உங்களுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அது உங்கள் கைகள் தேடிக் கொண்ட(தீய)வற்றின் விளைவேயாகும். அவன் பெரும்பாலான தவறுகளை மன்னித்து விடுகிறான்." (42:30)*

இதன் பொருள் என்னவென்றால் எவரேனும் ஒருவரைப் பற்றி உங்களிடம் குறை இருந்தால் நீங்கள் செய்ய வேண்டியது அந்தக் குற்றங் கூறுதலை (புகாரை) உங்கள் பக்கமே திருப்பிக் கொள்வதுதான். நீங்களே குற்றவாளி என்றாகும்படியான காரணத்தை நீங்கள் தேட வேண்டாம். உண்மையிலேயே தவறு உங்களுடையது என்றும், மற்றவருடையது அல்ல என்றும் உணரும் போது, உங்கள் தவறை நீங்களே சரி செய்து கொள்ளும்படி ஆவீர்கள். மேலும் தேவையற்ற கோரிக்கைகளிலும் கற்பனையான ஓர் எதிரிக்கு எதிராகச் செயல்படுவதிலும் உங்கள் நேரத்தை செலவிட மாட்டீர்கள்.

> *மக்கள் ஒருவரை ஒருவர் குற்றம் கூறுவது தவிர்க்க இயலாதது என்ற வகையிலேதான் இந்த உலகம் படைக்கப்பட்டிருக்கிறது. எனவே நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் மற்றவர்களைக் குறை கூறும் எண்ணம் நமது மனதில் எழுந்த உடனேயே அதனை அகற்றி விட வேண்டும்.*

## எதிரிகளை நேசியுங்கள்

மனிதர்கள் மீதான இறைச் செயல்பாட்டின்படி இறைவன் மனிதர்களுக்குச் சுதந்திரம் அளித்துள்ளான். இந்தச் சுதந்திரத்தினால் மனிதர்களுக்குள் பகைமை உண்டாகும். சில நேரங்களில் அது போருக்கே இட்டுச் செல்லும். ஆனால் பகைமை என்பதற்கும் போர் என்பதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை இஸ்லாம் தெளிவாக்குகிறது.

இறைநம்பிக்கையாளர்களுக்கு அவர்களுடைய எதிரிகள் மீது போர் தொடுக்கும் உரிமை இல்லை. எதிரிகளைப் பொறுத்தவரை இறைநம்பிக்கையாளர்கள் செய்ய வேண்டியது போர் தொடுப்பதை விட மிகவும் வேறானது. அவர்களது கடமை, இஸ்லாத்தின் செய்தியை அவர்களுடைய எதிரிகளுக்கு அமைதியான முறையில் தெரிவிப்பதுதான். இதனைக் குறித்துக் குர்ஆன் இப்படித் தெளிவாகக் கூறுகிறது:

*“எவர் அல்லாஹ்வின்பால் (மக்களை) அழைத்து, நற்செயல்கள் புரிந்து, “நான் உறுதியாகக் கீழ்ப்படிந்தவர்களில் ஒருவன்” என்று கூறுகிறாரோ அவரைவிட அழகிய சொல்லை உடையவர் யார்? நன்மையும் தீமையும் சமமாகமாட்டா. (ஆகவே, நபியே!) மிகச்சிறந்த நன்மையைக் கொண்டு (தீமையைத்) தடுப்பீராக! அப்போது உம்முடன் பகைமை கொண்டிருந்தவர்கூட உற்ற நண்பரைப்போல ஆகிவிடுவதை நீர் காண்பீர்!”. (41:33–34)*

*அதாவது ஒருவரை எதிரி என்று கூறி அவர் மீது போர் தொடுப்பதைக் காட்டிலும் அமைதியான வழிமுறைகளில் எதிரியை நண்பனாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை இஸ்லாமிய மார்க்கம் நம்புகிறது.*

## அமைதியின் ஆற்றல்

*ஒரு நபிமொழி, “கடுமையான தன்மைக்கு அளிக்காததை (நற்பலனை) இறைவன் மென்மையான தன்மைக்கு அளிக்கிறான்” என்று உள்ளது.*

*அதாவது, வன்முறையான செயல்பாட்டைக் காட்டிலும் அமைதியான செயல்பாடே குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்ததாகும். மரணம் – அழிவு அல்லது போர் – வன்முறை ஆகியவற்றின் மூலம் நாம் பெறுவது ஒன்றுமில்லை.*

*அமைதியான சூழல் மக்களுக்கிடையே நன்முறையிலான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும்படிச் செய்கிறது. நட்பும் நேசமும் உயிர்த்திருக்க முடியும்படி அது செய்கிறது. சாதகமான நல்ல சூழலில் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தழைத்து மேலோங்கி, இருக்கும் மூலாதாரங்களைக் கொண்டு வளர்ச்சி மற்றும் நற்காரியங்களைச் செய்ய முடியும். நேர்மறையான மனநிலை நிலைத்து நின்று அறிவுப்பூர்வமான வளர்ச்சிக்கு உதவி புரியும்.*


*அதனால்தான் எல்லாவகையிலும் போரையும் மோதலையும் தவிர்க்கவும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அமைதியை ஏற்படுத்தும்படியும் இஸ்லாம் நமக்குக் கட்டளையிடுகிறது.*

# அமைதியின் மூலத்தோற்றம்

இஸ்லாமும் வன்முறையும் என்பது ஒன்றுக்கொன்று முரணானவை என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்டதல்ல. இஸ்லாமிய வன்முறை என்பது காணக் கிடைக்காத ஒன்றென்பது கண்கூடானது என்ற வகையில் இஸ்லாமிய வன்முறை என்பது அடிப்படையற்ற நிராகரிக்க வேண்டிய ஒன்றாகும். நடப்புலகில் வன்முறை என்பது நிலைத்திருக்கக் கூடிய ஒன்றல்ல. வன்முறை என்பதே இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு முற்றிலும் அந்நியமான ஒன்றாகும். இஸ்லாம் ஒரு நிரந்தரமான மார்க்கம் என்ற நிலையில் மனித குல வரலாற்றின் பிற்காலங்களில் நிலைத்து நீடிக்க இயலாத வன்முறை என்பது இஸ்லாமிய கொள்கைத் திட்டங்களில் சேர இயலாத ஒன்றாகும். இஸ்லாமிய மார்க்கத்துடன் வன்முறையை இணைக்க முயல்வது இஸ்லாமிய மார்க்கத்தின் நிரந்தரத்தன்மை மீது சந்தேகங்களை உருவாக்கக் கூடியதாகும்.

இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) அவர்கள் தம் இறைவனிடம் மனமுருகி தினமும் இப்படிப் பிரார்த்தித்தார்கள்:

> "ஓ இறைவா! அமைதியின் மூலம் நீ தான்! உன்னிலிருந்தே அமைதி வருகிறது, அது உன்னிடமே திரும்புகிறது, எனவே எங்களை அமைதியாக வாழச் செய்வாயாக! எங்களை சுவர்க்கத்தில் நுழையச் செய்வாயாக! அது அமைதியின் இல்லமாகும்! உன் அருளைப் பெற்றதாகும்! ஓ இறைவா! உனக்கே அனைத்து மகிமையும் கண்ணியமும்!"



# நிகரற்ற ஆளுமை
# மவ்லானா வஹீதுத்தீன் கான்

*1925ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள 'ஆஸம்கர்' எனும் ஊரில் பிறந்து வளர்ந்து, மரபு வழியில் இஸ்லாமியக் கல்வியைப் பயின்று, பல ஆண்டுகளாக தில்லியில் வசித்து வந்த இஸ்லாமிய மார்க்கத்தின் மாபெரும் ஆளுமை; மாபெரும் அறிஞர், மவ்லானா வஹீதுத்தீன்கான் அவர்கள். தமது தொன்னூற்று ஆறாவது வயதில் 21–04–2021 அன்று காலமான மவ்லானா அவர்கள் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்லாமிய மார்க்கப் பணியையும் எழுத்துப் பணியையும் எவ்விதத் தொய்வுமின்றி செய்துவந்தவர்.*

*இஸ்லாம் குறித்த பல தவறான கருத்துக்களைக் களைந்து 'இஸ்லாம் ஓர் அமைதி மார்க்கம்' என்பதைத் தம்முடைய கட்டுரைகள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் தொடர்ந்து பரப்பி வந்தவர்; உலக அமைதிக்காகவும் மத நல்லிணக்கத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.*

*உலக அமைதிக்கான மவ்லானாவின் பங்களிப்பை அங்கீகரித்துப் பல்வேறு நாடுகளும் அமைப்புகளும் விருதுகளை வழங்கி கவுரவித்துள்ளன. அவற்றுள் சில:*

1) Demiurgus Peace International Award by the Nuclear Disarmament Forum AG.
2) Ambassador of Peace Award by the International Federation for World Peace, Korea.
3) Rajiv Gandhi National Sadbhavna Award
4) National Citizen's Award, presented by Mother Teresa.
5) Sayyidina Imam Al Hassan Ibn Ali Peace Award in Abu Dhabi
6) Padma Vibhushan (second-highest civilian award- 2021)

*1976இல் மவ்லானா அவர்கள் உருது மொழியில் தொடங்கிய 'அர்ரிஸாலா' எனும் மாத இதழ், கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக இடைவெளியின்றி தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் ஆங்கில வடிவம்* Spirit of Islam *எனும் பெயரில் பெங்களூருவிலிருந்து வெளியிடப்பட்டு வருகிறது.*

*மவ்லானா அவர்கள் உருது மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருக்குர்ஆனின் எளிய தமிழாக்கம் தற்பொழுது செம்பதிப்பாகத் தமிழில் வெளிவந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.*

'இஸ்லாம்' என்ற சொல்லுக்கு சாந்தி, அமைதி என்று பொருள். இறைவனின் பண்புப் பெயர்களில் 'அஸ் ஸலாம்' (அமைதியின் மூலமானவன்) என்பதும் ஒன்று. திருக்குர்ஆனில் மனிதர்களை நோக்கி "ஏக இறைவன் உங்களை அமைதி இல்லத்திற்கு அழைக்கிறான்" (10:25). என்று கூறப்பட்டுள்ளது.

"சாந்தியைப் பரப்புங்கள்" (திர்மிதீ) என்பது இறைத்தூதரின் வாக்காக இருக்கிறது.

திருக்குர்ஆன் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அமைதிக்கான நூலாகும். வன்முறைக்கும் அதற்கும் எந்தத் தொடர்புமில்லை. இஸ்லாம் வன்முறைக் கலாச்சாரத்திற்கு முற்றிலும் எதிரானது. இஸ்லாமியப் பண்பாட்டை 'அமைதிப் பண்பாடு' என்று ஒற்றை வரியில் கூறலாம்.

மூதறிஞர் மவ்லானா வஹீதுத்தீன் கான் (1925-2021) அவர்கள் இந்நூலில் இஸ்லாத்தின் அமைதிப் பண்பாட்டைப் பல்வேறு கோணங்களில் விளக்குகிறார்.

Goodword Books
CPS International

ISBN 81-85063-73-7
9 788185 063737